பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 2 திங்கட்கிழமை (18.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :234

## கூட்டமைப்பினரைச் சந்தித்த பின் நேற்றுத் தெரிவிப்பு

# பொதுக்கட்டமைப்புக் குறித்து புலிகள் இனி அலட்டிக்கொள்ளவே மாட்டார்கள்

## வெளிநாடுகளிடம் நேரடியாக நிதி உதவி தாம்கோருவர் என்கிறார் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி, ஜூலை 18

**பொதுக்கட்டமைப்பு இனி முடிந்த விடயம். அது குறித்துப் புலிகள் இனி மேல் அலட்டிக்கொள்ளவே மாட்டார்கள். பொதுக்கட்டமைப்பு செயற்படாத நிலை இருப்பதால் சர்வதேச சமூகத்துக்கு அதை விளக்கி ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற தமிழர் பிரதேசத்தின் நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்குரிய நிதியை தமிழர் தேசத்துக்கு நேரடியாகத் தந்துதவுமாறு சர்வதேச சமூகத்தைப் புலிகளும், தமிழர் தேசியக் கூட்ட மைப்பினரும் வற்புறுத்திக் கோருவார்கள்.**

**- இப்படித் தெரிவித்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்று நண்பகல் சந்தித்த பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

நேற்று முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3மணிவரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான கஜேந்திரன் வெளிநாடு சென்றுள்ளார். அவர் தவிர்ந்த ஏனைய 21 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, வவுனியா மாவட்ட அரசியல் பொறுப் பாளர் ஞானம் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இணைந்த 9 சிறுவர் பெற்றோரிடம் நேற்று ஒப்படைப்பு

கிளிநொச்சி, ஜூலை18

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்த பதினெட்டு வயதுக்குட்பட்ட 9 சிறுவர்களை அவர்களது பெற்றோர்களிடம் விடுதலைப் புலிகள் ஒப்படைத்தனர்.

கிளிநொச்சியில் உள்ள வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் வைத்து நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு இந்தச் சிறுவர்கள் பெற்றோர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டனர்.

வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலக செயலாளர் செல்வி மாலதியிடம் ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான விடுதலைப் புலிகளின் தூதராலயப் பணிப்பாளர் மு.தியாகராஜ குறிப்பிட்ட ஒன்பது சிறுவர்களையும் கையளித்தார். பின்னர் அந்தச் சிறுவர்கள் அவர்களது பெற்றோரிடம் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகச் செயலாளரால் ஒப்படைக்கப்பட்டனர். (ஓ-ரி)

## ஜூலை 25 ஆம் திகதி ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 18

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு மாதம் நிறைவுறும் எதிர்வரும் 25ஆம் திகதி நாடுமுழுவதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

வடக்கு- கிழக்கைத் தவிர்ந்த ஏனைய நகர்ப்புறங்களில் ஒரே சமயத்தில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு தாம் தயாராகி வருகின்றனர் என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ கூறினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுகள் மூலம் தீர்வு காணப்படுமா? தமிழ்க் கூட்டமைப்பு நம்பிக்கை இழப்பு

கிளிநொச்சி, ஜூலை18

இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வுகாணப்படும் என்ற நம்பிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழந்து வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

''சமாதானப் பேச்சு மூலமாகத் தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படும் என்ற விடயத்தில் நாங்கள் எல்லோரும் நம்பிக்கை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்'' - என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான சம்பந்தன்.

நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலி

(12 ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது அகவணக்கம் செலுத்தப்படுகிறது...

## பேரினவாதத்துக்கு எதிராக ஹற்றனில் நேற்று ஆர்ப்பாட்டம்!

ஹற்றன், ஜூலை18

பேரினவாத சக்திகளின் செயற்பாடுகளைக் கண்டித்தும், பொதுக்கட்டமைப்பை எதிர்த்தும் மலையகம், ஹற்றனில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

காலையில் ஹற்றன் நட்சத்திர சதுக்கத்தில் ஒன்றுகூடிய 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து அங்கு பொதுக்கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

இளைஞர்கள், தோட்டத் தொழிலாளர்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

''இனவாத ஜே.வி.பியின் ஊடுருவலை மலையகத்தில் தடுப்போம்'', ''பொதுக் கட்டமைப்பை ஆதரிப்போம்'', ''நிரந்தர சமாதானம் வேண்டும்'', ''இனியொரு யுத்தம் வேண்டாம்'', ''இனவாதத்துக்கு அரசே அடி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சில்லுகள் இல்லா பஸ் பொதுக்கட்டமைப்பு; இனிமேல் அதை எவரும் செலுத்தமுடியாது!

### இப்படிக் கூறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஜூலை 18

''அரசும், புலிகளும் செய்துகொண்ட பொதுக்கட்டமைப்பு உடன்பாடு என்பது சக்கரங்கள் இல்லாத ஒரு பஸ். அதை யாராலும் இனி செலுத்தவே முடியாது.''- என்று கூறுகிறார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக உயர் நீதிமன்றம் விடுத்துள்ள இடைக்காலத் தடையுத்தரவு பற்றி விளக்கும் செய்தியாளர் மாநாடொன்றை ஜே.வி.பியினர் நேற்று கொழும்பு தேசிய நூலகத்தில் நடத்தினர். அந்த மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 17 கிளைமோர் குண்டுகள் மன்னாரில் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, ஜூலை 18

மன்னார் பள்ளிமுனை கோந்தைப்பிட்டி என்ற இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு கிளைமோர் குண்டுகளும், மேலும் பல வெடிபொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் அதிகாலை 1.45 மணியளவில் மன்னார் பொலீஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து பொலீஸார் இவற்றைக் கைப்பற்றினர்.

ஓட்டோ ஒன்றில் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருக்கையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

ஓட்டோவிலிருந்து 17 கிளைமோர் குண்டுகள், வெடிகுண்டுகள் தயாரிப்பதற்கான மூலப்பொருள்கள் மற்றும் 3 கையடக்கத் தொலைபேசிகள் போன்றவையும் மன்னார் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன.

அந்த வெடிபொருள்களை ஏற்றிச் செல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் நெருக்கடி குறித்த இன்றைய கூட்டம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

இன்றைய அரசியல் நெருக்கடி நிலை குறித்து ஆராய்வதற்காக இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்முடியாத காரணங்களால் இடம்மாற்றப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் இதனை அறிவித்தது.

இக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்றும் -

இதில் தேசிய எழுச்சிப் பேரவை, பொது அமைப்புகள், தொழிற்சங்கங்கள், துறைசார் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறும் -

பொதுஅமைப்புகளின் ஒன்றியம் கேட்டுள்ளது. (ஒ)

# கோப்பாயில் மாடுகளுக்குத் தடுப்பூசி

அச்சுவேலி,ஜூலை18

கோப்பாய் கால்நடைகள் வைத்திய அதிகாரி பிரிவில் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் தடுப்பூசி ஏற்றப்பட உள்ளது.

தடுப்பூசி போடப்படும் இடங்களின் விவரம் வருமாறு:-

இன்று காலை 7.30 மணிமுதல் 9 மணிவரை உரும்பிராய் திருக்குமரன் சனசமூக நிலையம், முற்பகல் 9.00-10.30 மணிவரை உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடி.

நாளை காலை 7.30 - 9.00 மணிவரை கரந்தன் பூதராயர் கோயிலடி, முற்பகல் 9.00-10.30 மணிவரை கரந்தரன் இராமுபிள்ளை வித்தியாசாலை.

நாளைமறுதினம் காலை 7.30 - 9.00 மணிவரை சிறுப்பிட்டி மேற்கு கிராம சேவையாளர் அலுவலகம் முற்பகல் 9.00-10.30 மணிவரை சிறுப்பிட்டி கிழக்கு கிராம சேவையாளர் அலுவலகம்.

எதிர்வரும் 22ஆம் திகதி காலை 7.30 - 9.00 மணிவரை ஆவரங்கால் சிவன்கோயிலடி, 9.00 -10.30 மணிவரை அச்சுவேலி விக்னேஸ்வரா சனசமூக நிலையம்.(ஒ-11-203)

## விபத்தில் இளைஞர் பலி!

மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதுண்டதில் அதனைச் செலுத்திச் சென்ற காரைநகர் புது வீதியைச் சேர்ந்த ரி.தேவ குமார் (வயது 24) என்பவர் உயிரிழந்தார். நேற்று மதியம் காரைநகர்ப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. முகத்திலும் தலையிலும் பலத்த காயமடைந்து உயிரிழந்த இவரது சடலம் யாழ்.மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-7)

# அண்ணாவியார் முருகவேள் காலமானார்



யாழ்ப்பாணம்,ஜூலை18

குடாநாட்டின் மூத்த நாட்டுக்கூத்து அண்ணாவியர்களில் ஒருவரான பண்டிதர் கலாபூஷணம் அப்புக்குட்டி முருகவேள் நேற்றுமுன்தினம் அவரது சொந்த ஊரான வட்டுக்கோட்டையில் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 80.

ஆசிரியராக, அதிபராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற இவர், தனது ஆசிரிய சேவைக் காலத்தில் வலிகாமம் மேற்கின் பல இடங்களிலும் செவிவழியாகப் பேணப்பட்டு வந்த நாட்டுக் கூத்துகளை கையெழுத்துப் பிரதிகளாக்கும் பெரும் பணியை மேற்கொண்டார். இதன் மூலம் பல நாட்டுக் கூத்துகள் புத்துயிர் பெற இவர் காரணமாக இருந்தார்.

இவர், வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவின் ஆயுள்காலத் தலைவராகப் பணியாற்றினார். பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச் கலாசாரப் பேரவை போன்றவற்றினால் இவர் பட்டங்கள் வழக்கிக் கௌரவிக்கப்பட்டவர். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு வட்டுக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். (எ)

# பண்டத்தரிப்பில் மின்னுருகியே வெடித்தது

வலி.தென்மேற்கு,ஜூலை18

விஷமிகள் சிலர் சைக்கிள் செயினை மின் கம்பி மீது எறிந்த காரணத்தினால் பண்டத்தரிப்பு சந்தைக்கு அருகில் உயர் அழுத்த மின் உருகி பலத்த சத்தத்துடன் வெடித்தது அத்துடன் நெருப்புப் பொறிகளும் ஏற்பட்டன.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பக லில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இந்தவெடிச் சத்தங்களாலும் நெருப்புப் பொறிகளாலும் சுற்றாடலில் வசிக்கும் மக்களும் வீதியால் போக்குவரத்து செய்த மக்களும் பதற்றமடைந்தனர். இலங்கை மின்சார சபையின் வட்டுக்கோட்டை மின் அத்தியட்சகர் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் விஷ மிகள் சிலர் சைக்கிள்செயினை மின்கம்பி மீது எறிந்தமையால்தான் இச்சம்பவம் ஏற் பட்டதாகத் தெரிவித்தார்.

இதேவேளை -

நேற்றைய உதயனில் - 2ஆம் பக்கத்தில் - இது தொடர்பாக வெளியான செய்தியில் மின்மாற்றி தீப்பற்றி எரிந்ததாக குறிப்பிடப் பட்டிருப்பது தவறு என்று மின்சாரசபையி னர் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ-135)

# பொதுக்கட்டமைப்புக் குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பின் பின்னர் தமிழ்ச்செல்வன் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு:-

*கேள்வி:-* இன்றைய சந்திப்புக் குறித்து...?

*பதில்:-* தமிழ்க் கூட்டமைப்புடன் மாதாந்தம் சந்திக்கும் சந்திப்புத்தான் இன்று இடம்பெற்றது. இருந்தாலும் இன்றைய சந்திப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. கள நிலைமைகள் மிக மோசமான நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ள நிலையில் கூட்டமைப்பினருடனான சந்திப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

தமிழ்மக்கள் எத்தகைய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பது பற்றியும், தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை பற்றியும் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச் சொல்லும் வேலைத்திட்டத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாங்களும் தீவிரமாகச் செயற்படவிருக்கின்றார்கள் எனக் கூறியுள்ளார்கள்.

எதிர்காலத்தில் ஏற்படப்போகும் நிலைமை குறித்து சர்வதேசத்துக்கும் எமது மக்களுக்கும் எடுத்துக் கூறும் பணியில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பணியாற்ற முடிவு செய்துள்ளனர்.

*கே:-* பொதுக்கட்டமைப்பில் சில சரத்துகளை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது. இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் உணர்வலைகள் எப்படி இருக்கின்றன?

*ப:-* இது ஒரு துரதிஷ்டவசமான நிலை. கடந்த காலங்களைப் போலவே தமிழ்மக்களுக்கு எந்த நன்மைகளும் சென்றடையக் கூடாது என்பதிலும் தமிழ் மக்களுக்கான தீர்வு முயற்சிகள் எதுவும் வெற்றியளிக்கக் கூடாது என்பதிலுமே சிங்களப் பேரினவாதத் தலைமைகள் ஏதோ ஒரு வகையான வழிமுறையைக் கையாண்டிருக்கின்றன. அங்குள்ள சிங்கள, பௌத்த இனவாதிகளைக் கொண்டோ, சிங்களக் கட்சிகள் மற்றும் பௌத்த மத பீடங்களைக் கொண்டோ அவையும் சரிவராத பட்சத்தில் அங்குள்ள நீதி, சட்டத்துறையைக் கொண்டோ எமது மக்களுக்கான அநீதிகளை நியாயப்படுத்த முற்படுகிறார்கள். முன்னெடுக்கப்பட்ட தீர்வு முயற்சிகளைச் சீர்குலைத்திருக்கிறார்கள்.

இதனடிப்படையில்தான் இப்பொழுதும் நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. இது ஒரு சாதாரண விவகாரம். அதாவது இந்தப் பொதுக்கட்டமைப்பு என்பது மனிதாபிமான நெருக்கடிக்கு உடனடி நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக இரு தரப்புகளும் இணைந்து உருவாக்கிய ஒன்று. இந்தக் கட்டமைப்பையே இன்று ஆட்டம் காணச் செய்திருக்கிறார்கள்; அதை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்; சீர்குலைத்திருக்கிறார்கள்.

**இதில் ஆச்சரியமில்லை**

இந்த வகையில் ஸ்ரீலங்காவின் நீதித்துறை இத்தகைய முடிவை எடுத்ததையிட்டு ஆச்சரியப்படுவதற்கில்லை. தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதில் எப்பொழுதுமே இவர்கள் உண்மையாகச் செயற்பட்டதேயில்லை. தமிழ் மக்களுக்கு விரோதமாகத்தான் ஸ்ரீலங்காவின் நீதித்துறையும் கடந்த காலங்களில் செயற்பட்டிருக்கின்றது.

எமது மக்கள் ஸ்ரீலங்காவின் சிறைக்குள் வைத்து அண்மையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக படுகொலை செய்தவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்பட்ட பொழுதும் அவர்கள் குற்றவாளிகள் அல்லர் எனத் தெரிவித்து விடுதலை செய்யப்பட்டனர். இது மட்டுமல்ல,

வரலாற்று ரீதியாகப் பார்ப்போமாக இருந்தாலும் தமிழ்மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைச் சட்டங்கள் கூட - எமக்கு எதிரான சட்டங்கள் கூட - ஸ்ரீலங்காவில் ஏற்படுத்தப்பட்டு நாம் அநீதிக்கு உட்படுத்தப்பட்டோம்.

அந்த அடிப்படையில் இந்தத் தீர்ப்பு நாங்கள் எதிர்பார்த்த ஒன்று என்றுதான் சொல்ல வேண்டும்.

*கே:-* எதிர்காலத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு என்ன விதமான அணுகுமுறை, நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறீர்கள்?

*ப:-* பொதுக்கட்டமைப்பு நீண்டகால இழுத்தடிப்புக்குப் பின்னர், ஜனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பம் இடப்பட்டது. உண்மையில் விருப்பமின்மையும் இழுத்தடிப்பும் அங்கு இருந்தது ஏற்கனவே தெரிந்த விடயங்களாகும்.

சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள், நிர்ப்பந்தங்கள் ஆகியவற்றுக்குப் பணிந்து அவர்கள் கையொப்பம் இட்டாலும் நடைமுறைக்குக் கொண்டுவரும் விடயத்தில் மேலும் கால தாமதங்களையும் இழுத்தடிப்புகளையும் ஏற்படுத்தும் போக்கைத்தான் கடைப்பிடித்திருக்கிறார்கள்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு மாதமாகப் போகிறது. கைச்சாத்திடப்பட்ட அன்றே நடைமுறைப்படுத்த ஆரம்பிக்குமாறு நோர்வேத் தரப்புக்கு வற்புறுத்தியிருந்தோம். ஆனால், இழுத்தடிக்கப்பட்டு, குழுவுக்கான உறுப்பினர்களை நியமனம் செய்து அறிவித்தார்கள்.- எப்போது...? உயர்நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்கு முதல்நாள்தான் அதை அறிவிக்கிறார்கள்.

ஆகவே, இது ஒரு திட்டமிட்ட ரீதியில் பொதுக்கட்டமைப்பை நடைமுறைக்குக் கொண்டுவராமல் தடுக்கின்ற நோக்கில் செயற்படுத்தப்படும் நாடகமாகவே நாங்கள் பார்க்கிறோம்.

இந்த நிலையில் இந்தப் பொதுக்கட்டமைப்புக் குறித்து மேலும் அலட்டிக் கொள்ள நாம் விரும்பவில்லை. ஏனெனில் சிங்களத் தரப்பு எமக்கு இணக்கப்பாடு தெரிவிக்கும் விடயங்களையோ, உறுதிப்பாடு கூறும் அம்சங்ளையோ நடைமுறைக்குக் கொண்டுவருவது என்பது கடந்த மூன்றரை வருடகாலத்தில் நடக்கவில்லை. அந்த வகையில் எமது மக்கள் முழு அளவில் ஏமாற்றமடைந்து இருக்கிறார்கள்.

சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசின் இந்தப் போக்கை எடுத்து விளக்குகின்ற பணியை முன்னெடுக்க வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம்.

எமது மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை இலங்கை அரசோடு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதன்மூலம் பெற்றுக் கொடுக்கலாம் என்ற எமது நம்பிக்கை நீதிமன்றம் அளித்த தீர்ப்போடு முற்றாகத் தகர்ந்த நிலையில் இருக்கின்றோம்.

மனிதாபிமான உதவிகளை நேரடியாக செய்யும் தீர்மானத்தை எடுக்கவேண்டிய நிலைக்குச் சர்வதேச சமூகம் தள்ளப்பட்டுள்ளது என்று நினைக்கிறேன்.

இதைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்து விளக்கி உணர்த்தும் பணியை எதிர்காலத்தில் தீவிரமாக்க இருக்கின்றோம்.

*கே:-* போர்நிறுத்த ஒப்பந்தத்தை பொறுத்தவரையில் கிழக்கு நிலைமைகள் எப்படியிருக்கின்றன?

*ப:-* அதாவது தென் தமிழீழத்தில். இறுதியாக திருகோணமலை மாவட்டத்தில் போராளிகளும், பொதுமக்களும் கொல்லப்பட்டனர். இது முழுக்க முழுக்க இராணுவமும், இராணுவப் புலனாய்வு அமைப்புகளும் இணைந்து செய்த வேலை. முழுக்க முழுக்க இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில்தான் இந்தக் கொலை வெறியாட்டம் நடந்துள்ளது.

ஏதோ ஒரு வகையில் விடுதலைப் புலிகளைச் சீண்டி யுத்தத்தை தொடங்குவதற்கான ஒரு போக்கைத்தான் சிங்களப் படைத்தரப்பு தீவிரமாகச் செயற்படுத்தி வருகின்றது.

குறிப்பாக தென்தமிழீழத்தில் - கிழக்கு மாகாணத்தில்தான் - இதைத் தீவிரமாக்கியுள்ளனர். இதனால் எமது போராளிகளுக்கான அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன.

ஒப்பந்த விதிமுறைப்படி நிராயுதபாணிகளாகத் தான் எமது போராளிகள் இந்த இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளுக்குள் அரசியல் பணியை முன்னெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இந்த வகையில் அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருந்த சூழலில், இப்படியான கொலைகள் தொடர்கின்றன.

இந்நிலையில் போராளிகளின் பாதுகாப்புக் கருதி அவர்களைப் பாதுகாப்பான பகுதிக்குள் - எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்- கொண்டுவரவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில்தான் கிழக்கு மாகாணத்தில் எமது செயற்பாடுகள் முடக்கப்பட்டு இருக்கின்றன. அங்கே படைத்தரப்பு எங்கள் மீதான நிழல் யுத்தத்தை மேலும் தீவிரப் படுத்தியுள்ளதை அண்மைக்காலத்தில் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

**போராளிகளின் பயணம்**

*கே:-* போராளிகளின் பயணம் தொடர்பாக அரசுக்கு வழங்கிய காலக்கெடு முடிவடைந்துவிட்டது. அடுத்தகட்ட நடவடிக்கை எவ்வாறு அமையப் போகின்றது?

*ப:-* ஏற்கனவே எமது கடிதங்கள் மூலமும், நேரடி உரையாடல்கள் மூலமும் கண்காணிப்புக் குழு மற்றும் அனுசரணையாளர்களுக்குத் தெளிவாக எமது நிலைப்பாட்டை விளக்கியுள்ளோம்.

எமது போராளிகளின் பயண நடைமுறைகள் ஏற்றுக்கொள்ளப்படாது நிராகரிக்கப்பட்டால் வழமை போலவே எமது போராளிகளின் போக்குவரத்துக்கள், பயண ஏற்பாடுகள் எம்மால் நடைமுறைப்படுத்தப்படும். இதை இலங்கைப் படைகள் தடுக்க முற்பட்டால் நாங்களும் பதில் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் என்பதை ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளோம்.

இருவார கால அவகாசம் முடிந்த நிலையிலும் நேற்று எமது உறுதிப்பாட்டை, எமது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளோம். எதிர்வரும் காலங்களில் எமது வழமையான நடைமுறைகள் பேணப்படும். இதைச் சிங்களப் படைகள் தடுப்பதாக அல்லது இதைக் குழப்புகின்ற நிலைமையை ஏற்படுத்துவதாக இருந்தால் நிச்சயமாக யுத்த நிறுத்த சூழலுக்கு நெருக்கடி வரும்.

*கே:-* இந்த நடைமுறையை எப்போது ஆரம்பிக்கப் போகிறீர்கள்?

ப:- எங்கள் பயண ஒழுங்குகள் என்பது, தேவைக்கு ஏற்ற வகையில் அமையும். எங்கள் பாதுகாப்போடு, எங்கள் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதை நாம் எப்பொழுதும் பகிரங்கப்படுத்தி விட்டுச் செய்வதில்லை. அது இயல்பாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கும். அதைச்சிங்களப் படைத்தரப்பு தடுக்கின்றபோதுதான் - அதனால் வருகின்ற நெருக்கடி நிலைமைகள் வெளிப்படுகின்றபோதுதான் - பயண நாள்கள் பற்றிய விடயம் உங்களுக்குத் தெரியவரும் என நான் நினைக்கிறேன்.

*கே:-* போக்குவரத்து தவிர்ந்த ஏனைய விடயங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும்?

*ப:-* போர் நிறுத்த உடன்பாடு மற்றும் அமைதி முயற்சிகளைப் பொறுத்தவரையில், இதைக் குழப்பிக்கொண்டு, முறித்துக்கொண்டு போக எமது தலைமைப்பீடமோ, தலைவரோ விரும்பவில்லை. நாங்கள் மக்களின் நியாயமான அபிலாஷைகளைத் தீர்க்கக் கூடிய விடயத்தை அமைதி வழியில் - சமாதான முறையில் - முயன்று பார்த்திருக்கின்றோம். மூன்றரை வருடகாலமாக நாங்கள் தீவிரமாக முயற்சி எடுத்திருக்கின்றோம்.

எங்கள் தலைவர் எவ்வளவோ விட்டுக் கொடுப்புகளைச் செய்து எவ்வளவோ பொறுமைகாத்துத்தான், சமாதான முயற்சியில் அர்ப்பணிப்போடு ஈடுபட்டுத்தான், இந்த மூன்றரை வருட காலத்தையும் நாம் கடந்திருக்கின்றோம்.

இந்தக் காலப்பகுதியில் பெரும் எண்ணிக்கையான போராளிகளை, பொறுப்பாளர்களை, மக்களை இழந்த நிலையிலும் நீண்ட பொறுமையைக் காத்திருக்கின்றோம்.

இப்போது நிலைமைகள் மிக மோசமாக்கப்பட்டுள்ளன. எமது போராளிகளின் நடமாட்டம் முடக்கப்படும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. நிழல் யுத்தத்தை மேலும் தீவிரமாக்கியுள்ளனர். பகிரங்கமாகவே, இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அரசியல் பணியில் ஈடுபடும் போராளிகள் இராணுவத்தின் துணையோடு சுட்டுக் கொலை செய்யப்படுகிறார்கள்.

இப்படியான நிலைமைகளை இனியும் நாங்கள் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாது. இதை அனுசரணையாளர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும், கண்காணிப்புக் குழுவினருக்கும் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

நாங்கள் அடுத்தகட்ட நடவடிக்கைகளை நகர்த்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆகவே, அந்த வகையில் இனி விடயங்களை சிங்கள அரசுதான் - சிங்களப் படைகள்தான் - தீர்மானிக்க வேண்டும். இனிவரும் சூழல் எப்படி அமையப் போகின்றது என்பதை அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரையில், வலிந்து ஒரு யுத்தத்தை தொடக்க நாம் விரும்பவில்லை. ஆனால், சிங்களப் படைகள் ஒரு யுத்தச் சூழலை உருவாக்குவதற்கு வலிந்து செயற்படும்போது, அதை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் நாம் இருப்பதால் அது தவிர்க்க முடியாதது என்றுதான் நினைக்கின்றேன்.- என்றார். (க-3)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

## நியாயம் செய்ய இன்னும் வழியுண்டு

பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்துவது இப்போதைக்கு சாத்தியமற்றது என்பது இலங்கை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பால் திட்டவட்டமாகத் தெளிவாகிவிட்டது; உறுதியாகிவிட்டது.

அரசினதும், நிறைவேற்று அதிகாரங்களினதும் தலைவியான ஜனாதிபதி, இத்தகைய உடன்பாடு ஒன்றுக்கு வழிப்படுத்துவது சட்ட விரோதமானது அல்ல என்று உயர்நீதிமன்றம் தனது இடைக்கால உத்தரவில் கூறியிருப்பதைத் தூக்கிவைத்துக்கொண்டு தமது செயற்பாட்டுக்கு அங்கீகாரமாக அரசுத் தரப்பு அதைக் கொண்டாடுகிறது. தமது முக்கிய கோரிக்கைகளை ஏற்று பொதுக்கட்டமைப்பின் பிரதான விடயங்களுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்துள்ளதால் பொதுக்கட்டமைப்பின் பிரதான பற்களைக் கழற்றிவிட்டோம் என்று துள்ளிக் குதிக்கின்றன பௌத்த, சிங்களப் பேரினவாத சக்திகள். உயர்நீதிமன்ற இடைக்காலத் தடையால் பொதுக்கட்டமைப்பின் அடிப்படை செயற்பாடுகளே கேள்விக்குள்ளாகிவிட்டன என்ற யதார்த்தத்தைச் சுட்டிக் காட்டுகின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி.

மொத்தத்தில் பொதுக்கட்டமைப்பு விடயம் மீண்டும் கிணற்றில் போட்ட கல்லாகிவிட்டது. இனியும் அதில் முன்நகர்வதற்கு இப்போதைக்கு இடம் ஏதுமில்லை.

ஆழிப்பேரலையால் பாதிப்புற்றோருக்கு இந்தக் கட்டமைப்பின் ஊடாக கொஞ்ச நஞ்ச உதவிகளைச் செய்வதற்கு மிஞ்சியிருந்த வாய்ப்புகளும் அடிபட்டுப்போய்விட்டன. அவர்களின் அவலம் தொடர்வது என்பது உறுதியாகிவிட்டது. அனர்த்த மீட்சிக்கான அவர்களது நியாயமான எதிர்பார்ப்பு நிராசையாகிவிட்டது.

இது விடயத்தில் - பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் - இனி என்ன என்பதுதான் பல தரப்பிலிருந்தும் எழுப்பப்படும் கேள்வி.

உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை தொடர்பாகத் தமிழர் தரப்பு என்ன கருத்துக் கூறப்போகிறது என்பதும் பலரும் எதிர்பார்க்கும் விவகாரமாகும்.

தமிழ்மக்களை அடிமைப்படுத்தும் விடயங்களை, அவர்களின் உரிமைகளைப் பறிக்கும் அம்சங்களை உறுதிப்படுத்துகின்ற சாசனங்களே - அடிமைப்பட்டயங்களே - இலங்கையில் நடைமுறையில் இருந்துவந்த - இருந்துவருகின்ற - அரசமைப்புகள். தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட இந்த அரசமைப்புகளின் கீழோ அல்லது தென்னிலங்கை அரசமைப்பு முறைமைகளின் (POLITY) கீழோ தமிழர்களுக்கு விடிவோ, நியாயமோ, தீர்வோ கிடைக்கப்போவதில்லை என்பதை இந்தத் தீர்ப்பு மீண்டும் அறுதியிட்டு உறுதிப்படுத்தியிருக்கின்றது என்பதைத் தவிர, இது விடயத்தில் தமிழர் தரப்புக் குக் கூற எதுவுமில்லை.

அதேசமயம், இத்தீர்ப்புத் தொடர்பாக சிங்களத் தரப்புக்கு - தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு - சுட்டிக்காட்டுவதற்கு ஒரு முக்கிய அம்சமும் தமிழர் தரப்பில் உள்ளது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாண்பதற்கு - தமிழர்கள் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் நீதி, நியாயம் செய்யப்படுவதற்கு - உண்மையான, நேர்மையான, உளப்பூர்வமான எண்ணமும், கருத்தும், நோக்கமும், விருப்பும் தென்னிலங்கைச் சிங்களத்திற்கு உண்டெனில் அதை நிரூபிப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும் பொன்னான சந்தர்ப்பம் ஒன்றை - அருமையான வாய்ப்பு ஒன்றை - இலங்கை உயர்நீதிமன்றத்தின் இந்த இடைக்கால உத்தரவு தந்திருக்கின்றது. உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை என்ற இழப்பிலும் கிடைத்த வரப்பிரசாதம் இது (Blessing in Disguise).

ஆழிப்பேரலையால் பாதிப்புற்றோருக்கு நிவாரணம் மற்றும் அவசர மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு இந்தப் பொதுக்கட்டமைப்பு அவசியம் என்பதைத் தென்னிலங்கையில் ஆளும் கட்சியும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் பகிரங்கமாக ஒப்புக்கொள்கின்றன. இதனை விரைந்து செயற்படுத்தவேண்டும் என்றும் அவை வலியுறுத்துகின்றன.

அப்படி இதைச் செய்வது சமாதானத் தீர்வுக்கும் அமைதி முயற்சிக்கும் வழிசமைக்கும் என்பதையும் அவை ஒப்புக்கொள்கின்றன.

ஆக, இப்போது உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவால் இவ்விடயம் தடைப்பட்டுப் போய்நிற்கின்றது.

இதுதான் பிரச்சினை என்றால் இதைத் தாண்டிச் செயற்படுவதற்கும் - தமிழரின் இனப்பிரச்சினைக்கு நியாயமான முறையில் தீர்வு காணும் மனப்பக்குவமும், விருப்பும், இணக்கப்பாடும் தமக்கு உள்ளன என்பதை வெளிப்படுத்துவதற்கும் - தென்னிலங்கைச் சிங்களத்துக்கு அருமையான வழி உண்டு என்பதையே தமிழர் தரப்புச் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

இலங்கை மக்களின் இறைமை தொடர்பான அரசமைப்பின் முதலாம் அத்தியாயம், இந்தப் பொதுக்கட்டமைப்புக்கு உயர்நீதிமன்றம் விதித்த தடையைத் தாண்டி அதைச் செயற்படுத்துவதற்கு அருமையான வழியை - வசதியை - வைத்துள்ளது.

அந்த அரசமைப்பு விதிகளின்படி -

மக்களின் இறைமை மூன்று விதங்களில் பிரயோகிக்கப்படுகிறது. சட்டம் ஆக்கும் அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளினால் நாடாளுமன்றம் மூலமும் சில சமயங்களில் நேரடியாக மக்களினால் சர்வஜன வாக்கெடுப்பு மூலமும் பிரயோகிக்கப்படும். பாதுகாப்பு மற்றும் ஆட்சித்துறைத் தத்துவம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரியது. மூன்றாவதான நீதித்துறைத் தத்துவம்தான் இங்கு - இப்போதைய விடயத்தில் - முக்கியமாகின்றது.

நீதித்துறை தத்துவமானது சட்டத்தினால் உருவாக்கப்பட்ட நீதிமன்றங்களின் மூலம் நாடாளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படும் என்கிறது அரசமைப்பு.

அந்த நீதிமன்றச் செயற்பாடுதான் இப்போது பொதுக்கட்டமைப்புக்கு இடைஞ்சலாக வந்து நிற்கிறது.

நாடாளுமன்றமே நீதிமன்றம் மூலம் நீதித்துறைத் தத்துவத்தைப் பிரயோகிக்கிறது என்கிறது இலங்கைத் தீவின் அரசமைப்பு.

அப்படியானால் அந்த நீதித்துறை இடைஞ்சலை நாடாளுமன்றம் மூலமே நிவர்த்திக்கமுடியும்.

நாட்டின் அரசமைப்பு மற்றும் சட்டங்களுக்கு அமைவாகவே நீதிமன்றங்கள் செயற்படுகின்றன. - பொதுக்கட்டமைப்பு விடயத்தில் நீதிமன்றத் தடையும் அதற்கு உட்பட்டு வந்ததே.

பொதுக்கட்டமைப்பு ஏற்பாடு நியாயமானது, விரைந்து செயற்படுத்தப்பட வேண்டியது,பாதிப்புற்ற தமிழ் பேசும் மக்களுக்கும் அவசர மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அது அவசியமானது என்பதைத் தென்னிலங்கைச் சிங்களம் ஏற்றுக்கொள்ளுமானால் -

அந்தப் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டு ஏற்பாடுகள் செயற்படுவதற்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடைவிதிக்கக் காரணமான அரசமைப்பு விதிகள் மற்றும் சட்டங்களை - இந்தப் பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டுக்காகவாவது - சட்டமாக்கும் அதிகாரம் உடைய நாடாளுமன்றமே மாற்றியமைக்கலாமே?

எதிரணியில் இருக்கும் ஓர் எம்.பி. ஆளும் கட்சிக்குக் குத்துக்கரணம் அடிக்கவும், ஆளும் கட்சித் தலைவர்களின் அரசியல் சுயலாபங்கள், பதவி ஆசை போன்றவற்றை நிறைவு செய்யவும் அரசமைப்பை அடிக்கடி மாற்றித் திருத்தி, புதுக்கி அமைத்த வரலாற்றை உடையது இலங்கைத் தீவு.

மக்களின் மனிதாபிமான பிரச்சினையை நிறைவு செய்வதற்கு தென்னிலங்கைச் சிங்களவர்களின் இரண்டு பிரதான கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முழு ஆதரவுடன் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்று இதைச் சுலபமாக செய்ய முடியுமே?

மனமுண்டானால் இடமுண்டு. தென்னிலங்கைச் சிங்களத்துக்கு அந்தத் தாராள மனமுண்டா?

பொதுக்கட்டமைப்புக்கு இடைஞ்சலாக இருக்கும் அரசமைப்பு ஏற்பாடுகளையும், சட்டங்களையும் விரைந்து மாற்றி நியாயம் செய்யலாமே? பொதுக்கட்டமைப்பின் பிராந்திய சபை கிளிநொச்சியில் அமைவதைக் கூட நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மூலம் சட்டமாக்கி உறுதிப்படுத்தலாமே; செய்வார்களா? இதுதான் தமிழர் தரப்புக் கேள்வி.



நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' கவிதைத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ காவல்துறையின் துணைப் பொறுப்பாளர் மாதவன் ஏற்றுவதையும், தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் நூலினை வெளியிட்டு வைப்பதையும், கவிஞர் புதுவை இரத்தினதுரை ஏற்புரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# கவிஞர் புதுவையின் படைப்புக்கள் தேச விடுதலைக்கு வலுச்சேர்ப்பன

## நூல் அறிமுக விழாவில் புலிகளின் முக்கிய உறுப்பினர் யோகி புகழாரம்

கிளிநொச்சி, ஜூலை18

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் படைப்புகள் தேச விடுதலைக்கு வலுசேர்ப்பனவாக உள்ளன. விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் யோகரட்ணம் யோகி இவ்வாறு தெரிவித்தார்.

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' கவிதை நூல் அறிமுகவிழா கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அறிமுகவுரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

விடுதலைப் பயணத்தில் இலக்கியப் படைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனடிப்படையில் இந்தக் கவிஞரின் படைப்புகளும் எமது விடுதலைப் போராட்டத்தின் பல்வேறுபட்ட வெளிப்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றன. அதேவேளை, இவரது கவிதைகள் மக்கள் [illegible]ங்களை இலகுவாக வென்று விடுபவையாக உள்ளதுடன் இவரது தாயக எழுச்சிப் பாடல்களும் போராளிகளையும் மக்களையும் ஈர்த்து வைக்கின்றவையாக உள்ளன - என்றார்.

கவிஞர் புதுவை இரத்தினத்துரை தமது உரையில்:-

எமது வாழ்வையும் உரிமைகளையும் வேறு எவரும் தீர்மானம் செய்ய முடியாது. அதனை நாமேதான் தீர்மானம் செய்யவேண்டும். இந்த உண்மையைத்தான் இன்றைய எமது அரசியல் கள நிலைவரம் உணர்த்தி நிற்கின்றது.

கடந்த மூன்றரை வருடப் போர் ஓய்வு காலத்தில் எமது மண்ணின் படைப்பாளிகள், எழுத்தாளர்கள் சோர்வடைந்த நிலையில் இருந்ததைக் காண முடிந்தது. இனி நாம் முன்னைய உத்வேகத்துடன் செயற்பட வேண்டியகாலம் வந்துவிட்டது. எனவே, மீண்டும் மிடுக்குடன் எழுவோம் - என்றார்.

எழுகலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்விற்கு எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமை வகித்தார். நிகழ்வில் பொதுச்சுடரினைக் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றி வைக்கத் தமிழீழத் தேசியக் கொடியினைத் தமிழீழ காவல்துறைத் துணைப் பொறுப்பாளர் மாதவன் ஏற்றிவைத்தார். வரவேற்புரையினை கவிஞர் வேலணையூர் சுரேஸ் நிகழ்த்த அறிமுகவுரையினை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் யோகரட்ணம் யோகி நிகழ்த்தினார். தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் சிறப்புப் பிரதிகளை வழங்கிக் கௌரவித்ததைத் தொடர்ந்து மதிப்பீட்டுரையினை பு.சத்தியமூர்த்தியும் ஏற்புரையை நூலாசிரியர் புதுவை இரத்தினதுரையும் நன்றியுரையினை எழுத்தாளர் திருமதி ஆதிலட்சுமி சிவகுமாரும் நிகழ்த்தினர். இந்நூல் அறிமுக விழாவில் இலக்கிய ஆர்வலர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# உலக உணவு நிறுவனம் ஆழிப்பேரலை நிவாரணத்தை அடுத்தமாதத்துடன் நிறுத்தும்

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாதாந்தம் வழங்கிவரும் உலர் உணவு நிவாரணத்தை உலக உணவு ஸ்தாபனம் அடுத்த மாதத்துடன் நிறுத்த முடிவுசெய்துள்ளது.

உலக உணவு ஸ்தாபனம் வழங்கிவரும் உதவிகளை மறுபரிசீலனை செய்யும் கூட்டம் ஒன்று கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்றது.

புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அரச அதிபர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஆழிப்பேரலை பாதித்த மாவட்டங்களின் தற்போதைய நிலைமை குறித்து அரச அதிபர்கள் விவரங்களைச் சமர்ப்பித்தனர்.

உலக உணவு ஸ்தாபனம் மக்களுக்கு வழங்கிவரும் உலர்உணவு பொருள் விநியோகத்தை அடுத்த மாதத்துடன் நிறுத்துவது என்றும் -

எனினும், தேவை ஏற்படும் பட்சத்தில் சிறிது காலத்துக்கு விநியோகத்தை மேற்கொள்வதை அந்த நிறுவனம் மறுபரிசீலனை செய்யும் என்றும்- கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (எ- 3)

# குடாநாட்டில் மரம் நடுகையை றோட்டறி ஊக்குவிக்க வேண்டும்

குடாநாட்டில் வெப்பநிலை அதிகரித்துச் செல்வதற்கு முக்கிய காரணம் மரங்கள் அழிக்கப்படுவதாகும். ஆகவே, அழிக்கப்படும் மரங்களுக்குப் பதிலீடாக மரநடுகை ஊக்குவிக்கப்பட வேண்டும். இத்தகைய மரநடுகைப் பணியில் றோட்டறிக் கழகம் ஈடுபடவேண்டும்.

- இப்படியான வேண்டுகோள் ஒன்றை யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி. எஸ்.வரதராஜா விடுத்தார்.

யாழ்.றோட்டறிக் கழகத்தின் புதிய தலைவரான என்.சரவணபவன் பதவியேற்கும் நிகழ்வு அண்மையில் 'உதயன்' கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே நீதிபதி இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் என்றுமில்லாதவாறு தற்போது மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு மரங்கள் வகைதொகையின்றித் தறிக்கப்படுவதால், குடாநாட்டின் வெப்பநிலை உயர்வதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் றோட்டறிக் கழகம் குடாநாட்டின் சீரான சுவாத்தியத்துக்காக மரங்கள் நடப்படுவதை ஊக்குவிக்க வேண்டும்.

பாடசாலை மட்டத்திலும் பொது அமைப்புகள் மட்டத்திலும் விழிப்புணர்வை ஏற்படுத்த றோட்டறிக் கழகம் தனது பங்களிப்பை வழங்க வேண்டும். அதற்கேற்ற வகையில் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியம் - என்றார் அவர். (எ-3)

### உதயவாக்கு

வாழ்க்கை என்பது நீயே அமைப்பதாகும். பின்னர் எதற்காக நீ கவலை கொள்கின்றாய்?

-திருமதி ரோமா.

### நாளை

ஆடி 03
செவ்வாய்க்கிழமை
19.07.2005
திதி: திரயோதஷி
முன்னிரவு 10.12 வரை
நட்சத்திரம் : கேட்டை
காலை : 7.00 மணிவரை
மூலம்
பின்னிரவு: 5.43 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 10.31 - 12.01
ராகுகாலம்: 3.01 - 4.31
(யாவும் பழைய நேரப்படி)

# கள்ளுத் தவறணையை அகற்றக்கோரிக்கை

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணையை அகற்றுவதற்குஉரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதியில் உள்ள கள்ளுத் தவறணை காரணமாக ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும்-

கடந்த புதன்கிழமை மாலை ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தில் நடைபெற்ற ஆனி உத்தர தரிசனத்திற்குச் சென்று திரும்பிய பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட பெருமளவு பக்தர்கள் இந்த வீதியில் நின்று மது போதையில் அட்டகாசம் புரிந்தவர்களினால் தொடர்ந்து பயணிக்கமுடியாது அவதியுற்றதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை- ஈழத்துச் சிதம்பரத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி வருடாந்த தேவி மகோற்சவம் ஆரம்பமாக உள்ளதால் இந்த வீதி ஊடாக பெருமளவு பக்தர்கள் ஆலயத்திற்குச் செல்லவுள்ளனர் என்றும்-

எனவே, இந்த வீதியிலுள்ள கள்ளுத் தவறணையை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்- பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-73)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### புறோயிலர் கோழி விற்பனைக்கு

தரமானதும் நிறை கூடியதுமான கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். விசேட குறிப்பு: 50 இற்குமேல் தேவைப்படுவோருக்கு வாகன வசதி இலவசம் (கிலோ160) தியேட்டர் ஒழுங்கை, அச்சுவேலி. (37797)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப் பட்ட (Original prima Broiler) குஞ்சுகள், பேட் டுக்குஞ்சுகள் 18.07.2005 திங்கட்கிழமை பிற் பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித் துறை - நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டை மானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல் வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்றர் - முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37755)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

சகல ஆவணங்களுடன் Honda CG 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (37798)

### விற்பனைக்கு

எம் ரி-90 (Honda), ரக்ரர் (240), மைனர் கார் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: வை. இராஜேஸ்வரன் (அப்புளமி) அழகியவான் தோட்டம், கோப்பாய் தெற்கு, கோப்பாய். T.P.: 077 6916943. (37742)

11 தொடர் இலக்கமுடைய ரொயாட்டா கொறலா E 50 கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 0777 519440 (37855)

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 17xxxx தொடர் இலக்கமுடைய வெள்ளை நிற Nissan Sunny A/C கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P: 0777 614449. (37785)

### காணி விற்பனைக்கு

ஆடியபாதம் வீதியில் (செங்குந்தா சந்தைக்கு அருகில்) 9¾ பரப்பு குடியிருப்புக்காணி விற் பனைக்குண்டு. தொடர்பு: 021 222 6808 (37803)

### வீடு, காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியிலமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P: 011 4613157 (மாலை 6 மணிக் குப் பின்பு தொடர்பு கொள்ளவும்) (37614)

### வீடு வாடகைக்கு

சுதுமலையில் கொக்குவிலுக்கும் மானிப் பாய்க்கும் இடையில் புதிய , அழகிய, நன்னீர் வசதியுடனான வீடு கௌரவமான உத்தியோக குடும்பம் அல்லது படிக்கும் (பல்கலைக்கழக) மாணவியினருக்கு உடன் வாடகைக்குண்டு. T.P.077 6964678 (37785)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972ஆம் ஆண்டு, மிருகசீரிடம், 2ஆம் பாதம், பட்ட தாரி ஆசிரியை நல்லூரில் வசிப்பிடமாகக் கொண்ட மணமகளுக்கு அரச பணியில் உள்ள மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2647, மே/பா உதயன், யாழ்ப் பாணம். (37863)

யாழ். இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த, வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட, டிப்ளோமா பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றும் 48 வயதுடைய அழகிய மணமகளிற்கு 52 வயதிற்குள் மணமகன் தேவை. தொடர்பு: விள.இல. 2646, மே/பா உதயன். (37860)

### மணமகள் தேவை

Australia பிரஜாவுரிமையுடைய 5' 8" உயரம், 1977 ஆம் ஆண்டு, ரேவதி நட்சத் திரம், Engineer ஆக தொழில்புரியும் லக்கினத்தில் ராகு, 8இல் செவ்வாய், 7இல் கேது மணமகனுக்கு B.Com, Cima, விஞ் ஞானப்பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு:- Sri Luxmie marriage centre, No.289 2/1, Galle Road, colombo-6, T.P.4527432. (37861)

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 1971 ஆம் ஆண்டு, 5'7½" உயரம், உத்தரம் நட்சத் திரம், 7இல் செவ்வாய், ராகு, பாவம் 43, Bank இல் தொழில்புரியும் மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. தொடர்பு:- Sri Luxmie marriage centre, No 289 2/1, Galle Road, colombo-6, T.P. 4527432. (37861)

Australia P.R., 1977ஆம் ஆண்டு, 5'7" உயரம், பரணி நட்சத்திரம், Dentist ஆக தொழில் புரியும் மணமகனுக்கு Australia அல்லது U.K இல் Dentist அல்லது Doctor மணமகள் தேவை. தொடர்பு:-Sri Luxmie marriage centre, No. 289 2/1, Galle Road, colombo-6, T.P.4527432. (37861)

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1972 ஆம் ஆண்டு, அத்தம் நட்சத்திரம், 5 இல் சூரியன், செவ்வாய் பாவம் 10.25, Cima London,. B.Com. Hons, M.B.A. Passed, A.C.M.A. Completed, Finance Co - Manager ஆக தொழில் புரியும் 6' உயரமுடைய மணமகனுக்கு தகுதியான, கொழும்பில் வீடுள்ள மணமகள் தேவை. தொடர்பு : Sri Luxmie marriage centre, No. 289 2/1, Galle Road, colombo-6, T.P. 4527432. (37861)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 18" Table Model, Olivetti ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற் பனைக்குண்டு.

தொடர்பு: **றூபன் புத்தகசாலை** சந்திக்கு அருகில், மல்லாகம். (37850)

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வேலணைப் பிர தேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர் வரும் 22ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் தில் நடைபெறும்.

பிரதேசத்திலுள்ள அனைத்துத் திணைக் களத் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவ னங்கள், பொதுஅமைப் புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அழைக் கப்பட்டுள்ளனர்.

## மெகா புலமைப்பரிசில் பரீட்சை அறிவித்தல்

10-07-2005 ஞாயிறு அன்று நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களின் பதிவுகள் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே உள்ளதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**ASIAN COMPUTERS**

• யாழ்ப்பாணம் • சுன்னாகம் • சாவகச்சேரி
• நெல்லியடி • கிளிநொச்சி (கனிஷ்ட கல்லூரி)

## யாழ் மண்ணிலே முதல் முறையாக..!!



இலங்கையின் கணனித்துறை வரலாற்றின் Multimedia கற்கைநெறிகளில் பல சாதனைகள் படைத்த London Info Tech இன் இணை நிறுவனமான Yaarl Tech Sys தற்பொழுது யாழ் நகரில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ் மண்ணிலே நிலவிவந்த Multimedia கற்கைநெறிகளுக்கான குறையை நிவர்த்தி செய்யும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில், இந்தியாவில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கற்பித்தலை மேற்கொள்ளவிருப்பதும் இதன் சிறப்பம்சமாகும்.

**மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்தின் அனுசரணையுடன்.**

**மாபெரும் Multimedia கருத்தரங்கும் தமிழ் CD வழிப்பயிற்சி வெளியீடும்**

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலே காலை 10 மணிக்கு ஆரம்பம்.

ஜீலை 21 — Ent. Free !

ஆரம்ப விழாவினை முன்னிட்டு வழங்கப்படும் இலவச கற்கை நெறி..

**Certificate of Computer Awareness Course (CCAC)**

யாழ் நகரின் கணனித்துறை வரலாற்றில் முதல்முறையாக கணனிக் கல்வியை கற்கவிருப்பவர்களுக்கு யாழ் ரெக் கணனிக் கல்வியகத்தின் ஆரம்பத்தினை முன்னிட்டு வழங்கவிருக்கும் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு கற்கைநெறி.

இக்கற்கை நெறியானது கணனி பற்றிய பூரண அறிவை பெற்றுக்கொடுக்கும் நோக்கோடு வடிவமைக்கப்பட்டதொன்றாகும். மேலும் இக்கற்கைநெறிக்கு ஆரம்பக்கட்டணம் மட்டுமே அறவிடுவதோடு கற்கைநெறி முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டு புலமைப்பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன. கொழும்பின் பிரபல ஆசிரியர்களின் வழிகாட்டலில் இயக்கப்படவிருக்கும் இந்நிலையமானது, மாணவர்களின் எதிர்காலத்திற்கேற்ப வேறு பல கற்கைநெறிகளையும் வழங்கவிருக்கின்றது.

காலம் : 3 மாதம் பதிவுக்கட்டணம் 1250/= மட்டுமே அறவிடப்படும்

ஏற்பாட்டாளர்கள் : **யாழ். பல்கலைக் கழக வணிகக் கழகம்.** (C/42092)

விண்ணப்பங்கள் இன்று முதல் ஏற்றுக்கொள்ளப்படும்

YAARL TECH SYS. No: 3 Sir Pon Ramanathan Rd, Kaladdy Junction - Jaffna Tel: 0773 206 207 www.yaarltech.com

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 696 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 15-7-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5551762-5567887 |

லக்கினம் விருச்சிகம்

வெற்றி இலக்கங்கள்: **02 19 25 38**

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்பட்டுள்ளது

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,50,307 | 10/- | 35,03,070/- |
| 2.இலக்கங்கள் | 32,133 | 20/- | 6,42,660/- |
| 1.இல லக்கினம் | 31,603 | 30/- | 9,48,090/- |
| 2.இல லக்கினம் | 2,916 | 100/- | 2,91,600/- |
| 3.இலக்கங்கள் | 850 | 500/- | 4,25,000/- |
| 3.இல லக்கினம் | 83 | 5,000/- | 4,15,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| | | மொத்தம் | 76,25,420/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 86,77,670/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 10,00,000/- தொடர் இல. 4609081 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 ஜூலை 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 5554572-6-64 |
| கேகாலை | 5555044-4-23 |
| கண்டி | 5561666-9-22 |
| கம்பஹா | 5565484-9-24 |
| மாத்தளை | 5563712-9-31 |

### செயலாளர் நியமனம்

வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளராகக் கடமையாற்றிய இ.இராசதுரை இம்மாதம் முதல் வலி.மேற்கு பிரதேச சபையின் செயலாளராகப் பதவி ஏற்றுள்ளார். (ச-135)

### தேவை

Chines உணவு நன்கு சமைக்கத் தெரிந்த உணவு பரிமாறுவதில் நன்கு அனுபவமும் தேர்ச்சியும் உள்ளவர்களும் உணவகம் பராமரிப்பதில் அனுபவம் உள்ளவர்களும் கீழ் வரும் முகவரிக்கு நேரில் வரவும்.

**SKY LINE RESTAURANT** இல 198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 2227539

### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங் கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ் போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

### Pillaiyar Inn A Grade Hotel

**Room Boys தேவை**

பிள்ளையார் இன் இல் Room Boys வேலைக்கு உடனடியாக ஆள்கள் தேவை. மாநகர சபை எல்லைக்குள் உள்ளவரும் விரும்பத்தக்கவர்கள்.

தொடர்பு: 31, Manipay Road, Jaffna.
Tel: 222-2829, 222 5595

யாழ்.மண்ணில் அறுசுவை உணவுகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்

## ஸ்கை லயின் போசனசாலை

உங்களின் தேவை பூர்த்திசெய்யும் ஒரே இடம்

அனைத்து வைபவங்களுக்கும் தேவையான உணவுப் பண்டங்களை எங்களிடம் ஓடர் செய்வதன் மூலம் உங்களின் பணத்தை மீதப்படுத்திக்கொள்ளலாம். ஓடர் செய்யப்படும் உணவுகள் உங்களின் இடத்துக்குக் கொண்டு வந்து தரப்படும்.

**SKY LINE RESTAURANT**
இல. 198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 7539

## மரண அறிவித்தல்

### இராமநாதக்குருக்கள் அமிர்தேஸ்வரி அம்மா

புலோலியை வசிப்பிடமாகக் கொண்ட இராமநாதக்குருக் கள் அமிர்தேஸ்வரி அம்மா 16.07.2005 (சனிக்கிழமை) கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதக்குருக்கள் (முன்னாள் பிரதமகுரு, புலோலி பசுபதி ஈஸ்வரன் ஆலயம் சிவன்கோயில்) அவர்களின் அன்பு மனைவியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.07.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட் டுக்கொள்கின்றோம்.

பன்னையம்பதி லேன், புலோலி, பருத்தித்துறை. தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

# வாசகர் திருமுகம்

## வெள்ளைக் கடற்கரையில் பண்பாடு 'பறக்கின்றது'

சாட்டி வெள்ளைக் கடற்கரையின் நிலை மிகவும் வேதனைக்குரிய ஒன்றாக மாறிக் கொண்டு வருகின்றது. காரணம் இப்பகுதி மக்கள் அவ்வீதியால் பயணம் செய்யவே அருவருப்பாக உள்ளது. கடலுக்கு வருபவர்கள் கடலிலே தங்கள் தங்கள் கோலங்களைக் காட்டாமல் நடுவீதியில் நின்று அவர்களின் குணங்களைக் காட்டுவதில் என்னதான் லாபமோ தெரியவில்லை. அதைவிடக் கொடுமை, பாடசாலைக்கு, ரியூசனுக்கு என்று வீட்டில் பொய்சொல்லிவிட்டு இங்குவரும் மாணவர்களின் தொகையோ அதிகம். அவர்களின் கைகளில் சிகரட், சொப்பின் பாக்கில் சாராயப் போத்தல், சைக்கிள் கரியலில் புத்தகம். இவர்கள் எதிர்காலத்தில் கல்விமான்களாக வருவார்களா? அல்லது வழிகாட்டிகளாக இருக்கப்போகின்றவர்களா? இங்குவரும் காதல் ஜோடிகள் மண்கும்பான் சந்தியில் இருந்து கடற்கரைக்குப் போகும்வரை அவர்கள் போகும் விதமே சகிக்கமுடியாது. இவர்கள் என்ன ஜோடிகள் என்றே சந்தேகம்தான் எழுகின்றது. இப்பகுதியிலும் மக்கள் இருக்கின்றார்கள், அவர்களுக்கும் பண்பாடு உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஒருசிலபேர் இப்படிச் செய்வதால், எல்லோரையும் தப்பான கண்ணோட்டத்துடன்தான் பார்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்டவர்கள் எப்போதுதான் திருந்துவார்களோ?

ச.சானு

மண்கும்பான்

## வடக்கு - கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளரின் விளக்கம்

14.07.2005 ஆம் திகதிய தங்கள் பத்திரிகையில் வாசகர் திருமுகம் பகுதியில் இ.ரமணன், அராலி என்பவரது பெயரில் 'மாகாண சபையும் மனித உரிமை மீறலா? ' என தலைப்பிட்டு எழுதப்பட்ட கடிதம் தொடர்பாக-

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள வெற்றிடங்களை வேலையற்ற பட்டதாரிகள், கீழுழைப்பு நிலையிலுள்ள பட்டதாரிகள் மூலம் நிரப்புவதற்குரிய யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சை மாகாண பொது நிர்வாக அமைச்சின் சார்பில் இந்த அலுவலகத்தால் நடத்தப்பட்டது. அதன் பிரகாரம் குறித்த வாசகர் கடிதத்தின் 3ஆவது, 4ஆவது பந்தியில் நேர்முகப் பரீட்சை தொடர்பில் குறிப்பிட்டவை சம்பந்தமாகச் சில விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

1. கடிதத்தின் 3ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டதுபோன்று ஆட்சேர்ப்பு விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனையைப் புறந்தள்ளி விண்ணப்பித்த சகலருக்கும் நேர்முகப்பரீட்சை எனத் தீர்மானிக்கப்படவில்லை.

வர்த்தமானி / பத்திரிகையில் குறித்த ஆட்சேர்ப்பு விளம்பரத்தில் 5ஆவது பந்தியில் குறிப்பிட்ட திருப்திகரமான புள்ளிகளைப் பெறாத அபேட்சகர் விடயத்தில் அவருக்கு வழங்கும் பதவி, சேவையாற்றும் நிலையம் என்பவற்றை வடக்கு - கிழக்கு மாகாண சபை நிர்வாகம் தீர்மானிக்கும் என்பதற்கு அமைவாகவே அடிப்படைத் தகைமைகளையும் அதற்கான ஆவணங்களையும் உறுதிப்படுத்தும் பொருட்டு அனைவருக்கும் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது.

2. மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரது கடிதப் பிரகாரம், ஏற்கனவே பட்டதாரிப்பயிலுநர்களாக உள்ளவர்களுக்கு 20.05.2004ஆம் திகதியும் ஏனைய வேலையற்ற பட்டதாரிகளுக்கு 31.03.2005ஆம் திகதியும் (இது மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் கோரப்பட்ட விண்ணப்ப முடிவுதிகதி) பட்டதாரிச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதியாகும்.

30.05.2004ஆம் திகதிக்கு முன்பு சித்தியடைந்தவர்களுக்கு மட்டும்தான் நியமனம் வழங்கப்படும் என்று எந்த அறிவித்தலும் நேர்முகப்பரீட்சைச் சபையால் வழங்கப்படவில்லை.

3. இந்த நேர்முகப்பரீட்சை மூலம் யார் தேர்ந்தெடுக்கப்படுவார்கள், யார் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள் என்ற பெறுபேறு யாருக்கும் வழங்கப்படவில்லை. அதேபோன்று அவ்வாறு பகுக்கப்பட்டு, புள்ளிகள் அறிவிக்கப்படவுமில்லை.

4. குறித்த நியமனத்திற்கான வர்த்தமானி பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிட்ட அடிப்படைத் தகைமைகள் இல்லாத பரீட்சார்த்திகள் மட்டும் நிராகரிக்கப்பட்டார்கள்.

மேலும், குறித்த கடிதத்தில் முதலாவது பந்தியில் குறிப்பிட்ட 31.05.2005விண்ணப்ப முடிவுதிகதி என்பது தவறானது. விண்ணப்பமுடிவுதிகதி 31.03.2005 ஆகும்.

அத்துடன், கடிதத்தில் குறிப்பிட்டது போன்று 162 புள்ளியில் அல்லது இ.ரமணன், அராலி என்னும் பெயரில் எந்தப் பரீட்சார்த்தியும் யாழ். மாவட்டத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவில்லை.

பிராந்திய ஆணையாளர்,

யாழ்ப்பாணம்.

## அறிக்கைகள் வேண்டாம்! அபிவிருத்தியே வேண்டும்!!

யாழ்ப்பாண பட்டினமானது பலவருட கால யுத்தத்துக்கு முகங்கொடுத்த பின்னர் தற்போது மெல்ல மெல்ல மேன்மை பெற்றுவருகிறது. அதற்கு இங்குள்ள அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் துணைபுரிகின்றன. யாழ்ப்பாண மாநகரசபையும் பல செயற்பாடுகளைச் செய்து வருகிறது. ஆனாலும், மாநகரசபையின் சில செயற்பாடுகள் மக்களிற்கு அவ்வப்போது விசனத்தை ஏற்படுத்தவும் தவறுவதில்லை. நான் எமது நகரமும் மற்றைய நகரங்களைப்போல் உயர்ந்து, சிறந்து விளங்க வேண்டுமென்பதில் ஆர்வமுள்ளவன். அந்தவகையில், பலரும் இருப்பார்கள். இதனை வைத்துப் பார்க்கும்போது நகரநெருக்கடியைத் தீர்ப்பதற்கு மினிபஸ்களைப் பண்ணைப் பகுதிக்கு மாற்றப்போவதாக ஜூன் மாதம் முதல் அறிவிப்பு வெளியானது. ஆனால், என்ன நகர மத்தியை மினிபஸ்களே ஆக்கிரமித்து இப்போதும் அலங்கரிக்கின்றன. இதுதான் மாநகரசபை கூட்டம் கூடி எடுத்த தீர்மானமா? பெறுமதியான சபை ஒன்று தீர்மானம் எடுத்தால் அது திடமாகவே இருக்க வேண்டும். அதன்படி உரியவாறு நடைமுறைப்படுத்தவும் வேண்டும். இதுவே அழகு. முன்பும் ஒருமுறை சைக்கிள் பாதுகாப்பு நிலையக் கட்டணங்கள் வெவ்வேறு அளவில் அறவிடப்படுவதைக் கண்டு துவிச்சக்கரவண்டி பாதுகாப்புக் கட்டணம் ஒரு ரூபா என யாழ்ப்பாண மாநகரசபை அறிவித்தது. இதற்குச் செவிகொடுத்தவர் ஒருவருமில்லை. இரண்டு, மூன்று ரூபாய் என வசூல் இடம்பெற்றது. பின்னர் மாநகரசபையே முன்வந்து இரண்டு ரூபா கட்டணம் என அறிவித்தது. இதுவும் நல்லதோர் அதிகாரமிக்க செயற்பாடா?

இன்னுமொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும். பல வருடங்களிற்கு முன்னர் பக்குவமாகத் திருத்தப்பட்டது அழகுமிக்க மணிக்கூண்டுக் கோபுரம். ஆனால், அதன் சில வருட கதி அனைவரும் அறிந்ததே. இதற்கு யார்பொறுப்பு? இது மீண்டும் அவசரமாகத் திருத்தப்படவேண்டும். இப்படியே தீயணைப்புப் பிரிவும் அண்மைக் காலத்தில் விமர்சனத்திற்குள்ளாகியது இன்னுமொரு விடயத்தைக்கூறவேண்டும். அண்மையில் அடிக்கடி பத்திரிகையில் முன்னாள் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை எழுதும் கட்டுரைகள் வெளிவருவதை அவதானிக்க முடிகிறது. பாராட்டுக்கள். அவர் எழுதுபவற்றையும் நடைமுறைப்படுத்தி வெற்றிகாண மாநகரசபையை வேண்டுகிறேன்.

கொழும்புத்துறை

க.ஈஸ்வரன்

## அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ரூ.10 லட்சம் பெறுமதியான டிராக்டர்கள்




தமிழர் புனர்வாழ்வுக்கழக சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியின் டிராக்டர் வழங்கும் நிகழ்வில் சமூக, பொருளாதார அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் உரையாற்றுவதையும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உழவு டிராக்டர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: கிளிநொச்சிச் செய்தியாளர்)*

கிளிநொச்சி,ஜூலை18

சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான 7 டிராக்டர்களை வழங்கியுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துரித புனர்வாழ்வு அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் இந்த உதவி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி டிராக்டர்களைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 15ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்றது.

சமூக, பொருளாதார அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் பா.ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கை தமிழர் புனர்வாழ்வுக் கழக சமூக வலுவூட்டல் பணிப்பாளர் இ.ம.செல்வராஜா, சிறுவர் திட்டப் பணிப்பாளர் நாகேந்திரம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

நிகழ்விற்குத் தலைமை வகித்து உரையாற்றிய பா.ஸ்ரீஸ்கந்தராசா தமதுரையில்:-

சமூக, பொருளாதார அபிவிருத்தி வங்கி, ஆரம்ப காலத்திலிருந்தே பல சமூக நலத் திட்டங்களையும், துரித புனர்வாழ்வு வேலைத்திட்டச் செயற்பாடுகளையும் ஊக்குவிக்கும் வகையில் கடனடிப்படையில் பெரும் தொகை நிதியை வழங்கிவருகின்றது.

இதனடிப்படையில், இன்று உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களால் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படவேண்டிய வேலைத்திட்டச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தும் நோக்குடனும், அத்தகைய செயற்பாடுகளை மேன்மேலும் விருத்தி செய்வதற்குமாக தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான 7 டிராக்டர்கள் தற்போது வழங்கப்படுகின்றன -என்றார்.

இந்த நிகழ்வில் கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் தயாளகுணசிங்கம், உதவி விவசாயப் பணிப்பாளர் சீதா ஆனந்தராஜா, கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ந.கந்தசாமி, கிளிநொச்சி மக்கள் வங்கி முகாமையாளர் பால்ராஜ் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-305-203)




## வினாடி வினாப்போட்டியில் முதலாமிடம் பெறுவோர்

முல்லைத்தீவு வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கணித வினாடி வினாப் போட்டியில் வகுப்புரீதியாக முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் போட்டி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது.

தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இந்தப் போட்டி நடத்தப்பட்டது என்றும்-

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

கணித வினாடிவினாப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் விவரம் வருமாறு:-

**தமிழ்மொழி மூலம்**

தரம்6- இ.அனுருத்தா (தண்ணீரூற்று அ.த.க.பாடசாலை), தரம் 7- ஆ.நிரோஜன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), தரம் 8 -ஆ.நிதர்சன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), தரம் 9- த.ஹேமிலன் (கலைமகள் வித்தியாலயம்), தரம் 10- சி.கஜந்த் (கலைமகள் வித்தியாலயம்), தரம்11- வ.வினிதரன் (குமுளமுனை ம.வித்தி).

**ஆங்கில மொழி மூலம்**

தரம் 6- ஆ.மிதுர்சா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

(எ-353-203)

## வேரவிலில் கணனிப்பயிற்சி நிலையம் திறந்துவைப்பு

பூநகரி,ஜூலை18

வேரவில் பகுதி மாணவர்களின் நலன் கருதி பொருண்மிய மதியுரையகத்தினால் வேரவிலில் கணனிப் பயிற்சி நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி செ.கலைவாணன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் தேசியக்கொடியைத் தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைக்க, டென்மார்க் ரெக் நிறுவன இணைப்பாளர் திருமதி ஸ்ரீதேவி கணனிப் பயிற்சி நிலைய பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து கணனிப் பயிற்சி நிலையக் கட்டடத்தொகுதியை பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தியும் நூல்நிலையக் கட்டடத்தை அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனும் வைபவரீதியாகத் திறந்துவைத்தனர்.

நிகழ்வில் வேரவில் பாடசாலை அதிபர் எஸ்.கோடீஸ்வரன் உரையாற்றுகையில் -

பாடசாலைக் கல்வியை மட்டுமே நம்பியிருக்கும் மாணவர்களுக்கு இந்தக் கணனிப் பயிற்சி நிலையமும் நூலகமும் பெரும் நன்மையை அளிக்கும். இவ்வற்றை இன்று இங்கு திறந்துவைத்து மேற் படி பிரதேச வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவியதையிட்டு நான் மகிழ்வடைகிறேன் - என்றார்.

தொடர்ந்து பூநகரிப் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பாலசிங்கம், அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் உரையாற்றினர்.

டென்மார்க் ரெக் நிறுவனத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் வலையகத்தின் அனுசரணையுடன் அன்றையதினம் வறிய மாணவர்களுக்கு சைக்கிள்களும் வழங்கப்பட்டன. (எ-203)




## இலங்கை மின்சாரசபை - யாழ்.பிரதேச அலுவலகம்
# மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
|---|---|
| 23.07.2005 | கரந்தரன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம். |
| 30.07.2005 | இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், மருத்துவபீடப் பிரதேசம், பொற்பதி, சங்குவேலி. |
| 06.08.2005 | கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர். |
| 13.08.2005 | உரும்பிராய், கோண்டாவில், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப் பகுதி. |
| 20.08.2005 | புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம். |
| 27.08.2005 | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை. |
| 03.09.2005 | குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி. |

இதனால், மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

(சி-42090)(29-14-18-24)

# வாழ்த்துகின்றோம்



புன்னாலைக்கட்டுவன். ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் மேற்படி ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் மஹோற்சவ காலத்தில் "கம்பராமாயணம்" தொடர் சொற்பொழிவாற்றிய

**ஆசிரியர் சொல்லழகர் சு.லலீசன்**

அவர்களை

*அவருடைய பணியைப் பாராட்டி தங்கப்பதக்கம் அணிவித்துப் பொன்னாடை போர்த்திப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

ஆயாக்கடவை,
புன்னாலைக்கட்டுவன். ~ஆலய பரிபாலன சபையினர்.

(37866)(46-14-18-24)

## புனரமைக்கப்படாத நிலையில் காரைநகர் பழையகண்டி வீதி

காரைநகர், ஜூலை18

காரைநகர் பழையகண்டியில் உள்ள மதகு நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் இருப்பது குறித்துப் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகரின் பிரதான வீதியில் காணப்படும் இந்த மதகு நீண்டகாலமாகப் பலத்த சேதமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. தற்போது பழைய தகரம் ஒன்று மதகின் மேல் போடப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

அதேவேளை - இரவுவேளைகளில் மேற்படி மதகின் ஊடாகப் பயணம் செய்யும் பலர் விபத்துக்குள்ளாகிக் காயமடையும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த மதகினைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டது என்றும்- எனினும், இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் - பொதுமக்கள் தரப்பில் கூறப்பட்டது. (எ-73)

## விக்ரோறியாக் கல்லூரி மைதானம் விஸ்தரிப்பு

சுழிபுரம், ஜூலை18

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் விளையாட்டு மைதான விஸ்தரிப்புப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

மைதானத்துக்குக் கிழக்குப் புறமாகவுள்ள காணி கொள்வனவு செய்யப்பட்டு அதனுள் நின்ற பனை மரங்களை வெட்டி அகற்றும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் வழங்கும் நிதியுதவியுடன் இந்தப் பணிகள் நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-28)

## அலுமினியத் தளபாடம் பொருத்துவது குறித்த பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை18

அலுமினியத் தளபாடங்கள் பொருத்துவதற்கான இரு நாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாகாணக் கட்டடங்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கொழும்பு மகா வித்தியாலய மாவத்தையின் ஏசியன் ஹாட்வெயர் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் இப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சி நெறியில் பங்குபற்ற விண்ணப்பித்தோருக்கான அனுமதி அட்டைகள் யாழ்.கட்டடங்கள் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இரு நாள்கள் நடைபெறவுள்ள இப்பயிற்சிநெறிக்கு அனுமதி அட்டையில் குறிப்பிடப்படும் திகதிகளில் மட்டும் பயிற்சியாளர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-204)

### சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ.)
### வெதுப்பகம் குத்தகைக்கு

எமது சங்கத்தின் வெதுப்பகம் குத்தகைக்கு விடப்படவுள்ளது. குத்தகைக்குப் பெறவிரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பத்தை மாதாந்தம் செலுத்த விரும்பும் குத்தகைப் பணத்தை குறித்து எதிர்வரும் 29.07.2005ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். மேலதிக விவரங்களைச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ச.ப.நோ.கூ.சங்கம் (வ-து),
சங்கானை. (சி-44215)(29-14-18-24) - பொதுமுகாமையாளர்.

# தையல் வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை

**சுன்னாகத்தில் இயங்கிவருகின்ற பெண்களுக்கான ஆடைகள் தயாரிக்கும் நிலையத்துக்கு தையல் வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவைப்படுகின்றனர். அத்துடன் பெண்களின் உள்ளாடைகள் (Bra) தைக்கத் தெரிந்தவர்களும் தேவை.**

*(Bra வீட்டில் வைத்துத் தயாரித்தும் கொடுக்கலாம்)*
*மேலும் மூளாய் தெற்கில் இயங்கும் நிலையத்துக்கும் பெண்பிள்ளைகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**சிற்றி கணன் காமன்ஸ்,**
136, கே.கே.எஸ். றோட்,
பழைய இலங்கை வங்கிக் கட்டடம், சுன்னாகம்.

(37859)(46-14-18-24)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1955 | 2000 |
| 10 | 07 |
| 30 | 18 |

அமரர் **கந்தசாமி தர்மேசன்**
(உதவித் திட்டமிடல் அதிகாரி - வலிகாமம் கல்வி வலயம், சாரண உதவி ஆணையாளர் - காங்கேசன்துறை மாவட்டம்)

*எங்கள் அன்புத் தெய்வமே!*
*எமைத் தவிக்க விட்டுச் சென்று*
*வருடம் ஐந்து கழிந்தாலும்*
*மறவோம் உம் நினைவுகளை.....*

தரன் இல்லம்,
தேவாலய வீதி,
மூளாய் - சுழிபுரம்.

அன்பான மனைவி,
பாசமுள்ள முத்தரன்கள்.
(37872) (14-18-24)


வெளிவந்து விட்டது!



# சிறுகதை எழுதுவது எப்படி?

பத்துச் சிறுகதைகளும் கட்டுரைகளும்

எல்லா வகை இலக்கியங்களும் படைத்த
கலாபூஷணம்
அராலியூர்
ந. சுந்தரம்பிள்ளையின்
20ஆவது நூல்

180 பக்கங்கள் (37834)(51-19) ரூபா 150.00



# UNIT

பழையதோ! புதியதோ! எவற்றிற்கும் இது பொருந்தும்

நேற்று மெமரி
இன்று
கார்ட் டிஸ்க்
நாளை .....

இது எங்கள் மொபைல் சர்வீஸ் ரீமுடன் இணைக்கப்பட்டது.

UNIT Introducing Mega AMC

உங்கள் கணனிகளுக்கான வாரண்டி முடிந்துவிட்டது என்று கவலைப்படுகிறீர்களா?

வரண்டி பற்றி எனி கவலை வேண்டாம்
தாமதிக்காமல் இன்றே எங்களைத்
தொடர்பு கொண்டு உங்கள் கணனிகளுக்கு
புது உத்தரவாதம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்

Spot Mobile Service
Call: 021-4590720
0773134737

உத்தரவாதம் முடிந்த
உங்கள் கணனி மற்றும்
கணனி சார் பொருட்கள்
யாவற்றிற்கும் ஒரு வருட
உத்தரவாதம் அளிக்கிறோம்.

புதிய P4 கணனிகள்
3 வருட முழு
உத்தரவாதத்துடன்
கொழும்பை ஒத்த
விலைக்கே

347, K.K.S Road, Manohara Theatre Junction, Jaffna



உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ, பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு விசேடசலுகை

லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=



திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

# கீரிமலை நகுலேஸ்வரா பாடசாலையின் பொன்விழாவைக் கொண்டாட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை18

கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தின் பொன்விழாவை இம்மாதம் 31ஆம் திகதியன்று நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கீரிமலையில் இயங்கிவந்த இந்த மகா வித்தியாலயம் கடந்த 1992ஆம் ஆண்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களிலும் வசதியீனங்களின் மத்தியில் இயங்கிவந்தது.

தற்போது மேற்படி பாடசாலை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குச் சமீபமாக இயங்கிவருகின்றது. இந்த மகாவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 50 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு பொன்விழா நடைபெறவுள்ளதாகவும்-

. பொன்விழா மலர் ஒன்றும் இவ்விழாவில் வெளியிடப்படவுள்ளதாகவும் வித்தியாலய அதிபர் சு.சிவபாதரத்தினம் இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)



உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலகம் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டது. வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் மரக்கன்று ஒன்றைப் பொது அமைப்பின் பிரதிநிதி ஒருவரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: வலி.மேற்குச் செய்தியாளர்)*

# தென்மராட்சிப் பிரதேச ஆக்கங்களை உள்ளடக்கி மலர் வெளியிட ஏற்பாடு

தென்மராட்சி,ஜூலை18

தென்மராட்சிப் பிரதேச ஆக்கங்கள் தொடர்பான மலர் ஒன்று அடுத்த மாதம் வெளியிடப்படவுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலகக் கட்டடம் எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதியில் திறக்கப்படவுள்ளதையொட்டி அன்றையதினம் இந்த மலர் வெளியிடப்படவுள்ளது.

இந்த மலர் வெளியீட்டுக்குப் படைப்பாளிகளிடமிருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுவதாகவும் -

ஆக்கங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் 'ஆசிரியர், மலர் வெளியீட்டுக் குழு, தென்மராட்சிப் பிரதேச செயலகம் சாவகச்சேரி' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மலர் வெளியீட்டுக்குப் பிரதேச செயலர் தலைமையில் 15 பேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (எ-117)

# நல்லொழுக்க சம்மேளனத்துக்கு சிவநேசன் எம்.பி. நிதி ஒதுக்கீடு

வலி.தென்மேற்கு,ஜூலை18

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்திற்குத் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் டெக் ஆகியனவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவநேசன் எம்.பி. 40 ஆயிரம் ரூபா நிதியை இவ்வரு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்துள்ளார்.

மேற்படி சம்மேளனம் மேற்கொண்டு வரும் புகைத்தல், மதுப்பாவனை, போதைப் பொருள் பாவனையால் மக்களுக்கு ஏற்படும் தீமைகள் பற்றிப் பிரசாரம் செய்வதற்கு இத்தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் டெக் ஆகியன பயன்படுத்தப்படுமென்று சம்மேளனத்தின் தலைவர் சி.இராஜலிங்கம் தெரிவித்தார்.

தமது சம்மேளனம் யாழ். மாவட்டத்தில் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் தாய் - சேய் சிகிச்சைக் 'கிளினிக்'குகள் ஆகியவற்றில் புகைத்தல், மது பாவனை மற்றும் போதைப் பொருள் பாவனை ஆகியவற்றால் ஏற்படும் உடல், உள, பொருளாதாரப் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வுக் தரங்குகளை நடத்திவருகின்றது என்றும் -

இத்தகைய கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து நடத்த விரும்பும் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற பொது நல அமைப்புகள் சித்தன் கேணி சிவன் ஆலயத்திற்குச் சமீபமாக இயங்கி வரும் சம்மேளனத்தின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு ஏற்பாடு செய்துகொள்ள முடியும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-135)

# வலிகாமம் வலயக் கல்விப் பணிமனைக்கு இராமநாதன் வளாகத்தில் புதிய கட்டடம்

## புதனன்று அடிக்கல் நடப்பட்டது

வலி.தெற்கு,ஜூலை18

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்துக்குப் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்துக்கென மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியினர் பத்துப் பரப்புக் காணியினை வழங்கியுள்ளனர்.

புதிய வலயக் கல்விப் பணிமனை அமைப்பதற்கான கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இராமநாதன் கல்லூரி வளாகத்திலேயே அமைக்கப்படவுள்ள புதிய பணிமனைக்கான கட்டடத்துக்கான அடிக்கல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் நட்டுவைத்தார். அவருடன் இணைந்து யாழ். கல்வி வலயப் பொறியியலாளர் எஸ்.சிவபாலனும் அடிக்கல்லை நட்டுவைத்தார்.

புதிய பணிமனை இரண்டு மாடிகளைக் கொண்டதாக நிர்மாணிக்கப்படவுள்ளது. இதன் முதற்கட்டப் பணிகளுக்காக அரசு பத்து மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது. (எ-152)

# சித்த ஆயுள்வேத வைத்தியசாலை சங்கானையில் மீண்டும் இயங்கும்

வலி.தென்மேற்கு,ஜூலை18

வடக்கு - கிழக்கு மாகாண ஆயுள்வேத திணைக்களம் சங்கானையில் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றை விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் சங்கானைப் பட்டின உப அலுவலகக் கட்டடத்தில் முன்னர் இயங்கிவந்த இந்த இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை இரண்டு வருடங்களுக்கு முன்னர் மூடப்பட்டது.

இதனை மீண்டும் திறக்குமாறு இப்பகுதி மக்கள் விடுத்திருந்த கோரிக்கையையடுத்து விரைவில் இவ்வைத்தியசாலையைத் திறப்பதற்குக் கொழும்பிலுள்ள ஆயுள்வேதத் திணைக்கள ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

ஆயுள்வேதத் திணைக்களமே இவ்வைத்தியசாலையை நிர்வகித்து நடத்தும் என்றும் இதன் பிரகாரம் இந்த வைத்தியசாலைக்கு மருந்து வகைகள் தட்டுப்பாடு இன்றிக் கிடைக்கும் என்றும் வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் இ.இராசதுரை இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார்.(எ-135)

## அதிபர்கள் நியமனம்

வலி.தெற்கு,ஜூலை18

வலிகாமம் கல்விக் கோட்டத்தில் உள்ள தாவடி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, மயிலணி சைவமகா வித்தியாலயம் ஆகியவற்றுக்குப் புதிய அதிபர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சங்குவேலி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை அதிபர் எஸ்.சண்முககுலகுமாரன் தாவடி இந்து தமிழ்கலவன் பாடசாலைக்கும் -

உடுவில், மல்வம், புதுமடம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை அதிபர் என்.சிவநேசன் மயிலணி மகாவித்தியாலயத்துக்கும் அதிபர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமையாற்றிய எஸ்.செல்வராசா, த.சற்குணசர்மா ஆகியோர் இளைப்பாறியதைத் தொடர்ந்து அவர்களின் இடத்துக்குப் புதிய அதிபர்களை வலிகாமம் கல்வி வலயம் நியமித்துள்ளது.

(எ-152)

# வடமராட்சி மீனவருக்கு இறுதிக்கட்டமாக 340 படகுகளை 'கியூமெடிக்கா' வழங்கும்

வடமராட்சி,ஜூலை18

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் கடற்றொழில் உபகரணங்களை இழந்த வடமராட்சி மீனவர்களுக்கு இறுதிக்கட்டமாக 340 மீன்பிடிப் படகுகளையும் அவற்றுக்கான இயந்திரங்கள், வலைகளையும் 'கியூமெடிக்கா' நிறுவனம் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கவுள்ளது.

பருத்தித்துறை, சுப்பர்மடம் மீனவர் சங்க அலுவலகம் முன் யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் சங்க சமாசச் செயலாளர் கே.சூரியகுமாரன் தலைமையில் நடைபெறும் படகு வழங்கும் நிகழ்வில் ஜேர்மன் தூதரக அதிகாரி, 'கியூமெடிக்கா' நிறுவனத் தலைமைப் பிரதிநிதி, யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

தொழில் உபகரணங்களை இழந்துவிட்ட வடமராட்சி வடக்கைச் சேர்ந்த மீனவர்களுக்கும் வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமாரட்சி வடக்கில் வசித்துவரும் மீனவர்களுக்கும் வடமராட்சி கிழக்கில் நாகர் கோயில் - மணல்காடு பகுதி மீனவர்களுக்கும் இவை வழங்கப்படவுள்ளன. இறுதியாக வழங்கப்படும் படகுகளுடன் வடமராட்சி வடக்குப் பகுதிக்கு மாத்திரம் 704 படகுகளையும் அவற்றிற்கான இயந்திரங்கள் , வலைகள் என்பவற்றையும் 'கியூமெடிக்கா' நிறுவனம் வழங்கியுள்ளது.

(ஐ- 173)



ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு மணற்காடு தற்காலிக முகாமில் தங்கியுள்ள குடும்பங்களில் 15பயனாளிகளுக்கு வடக்கு - கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம் சைக்கிள்களை அண்மையில் வழங்கியது. பயனாளி ஒருவருக்கு சைக்கிள் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.(எ-202)

## புத்தூரில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

அச்சுவேலி,ஜூலை18

புத்தூர் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ள இடங்கள், திகதி பற்றிய விவரம் வருமாறு:-

இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 10.30 மணிவரை புத்தூர் கிழக்கு அறிவொளி சனசமூக நிலையத்திலும் -


10.30 மணிமுதல் 12 மணிவரை ஆவரங்கால் கிழக்கு லிங்கன் சனசமூக நிலையத்திலும் -

12 மணிமுதல் 1.30 மணிவரை ஆவரங்கால் கிழக்கு கலைஒளி சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

அதேபோல், நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையத்திலும் -

முற்பல் 10.30 மணிமுதல் 12 மணிவரை நவக்கிரி கிராம சேவையாளர் அலுவலகத்திலும் -

12 மணிமுதல் 1.30 மணிவரை நவக்கிரி சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (எ-11)




## தென்மராட்சிப் பாடசாலை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,ஜூலை18

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 28 பாடசாலைகளில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டங்களுக்கென 14 லட்சத்து 75ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வே.சாம்பசிவம் அறிவித்துள்ளார்.

(எ-117)

## சமுர்த்தி வங்கிக்கு அடிக்கல் நடுகை

கொடிகாமம்,ஜூலை18

கொடிகாமம் வலய சமுர்த்தி வங்கிக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

சமுர்த்தி பயனுகரி க.மணிவண்ணனால் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் அடிக்கல் நடப்பட்டது.

சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி ஆ.உமாதேவி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அடிக்கல்லினைக் கொடிகாமம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் எஸ்.சிறீதரன் நட்டுவைத்தார். (எ-74)

## சண்டிலிப்பாயில் பொதுசன உதவிப் பணம்

வலி.தென்மேற்கு,ஜூலை18

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறுபவர்களுக்கு ஜூலை மாதத்திற்கான கொடுப்பனவுகள் அந்தந்தத் தபால் அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பொதுசன மாதாந்த உதவிப் பணத்தைப் பெற்று வரும் புற்றுநோயாளர், காசநோயாளர், தொழுநோயாளர் ஆகியோரும் தங்களுக்கான கொடுப்பனவைத் தமக்குரிய தபால் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

மலாயன் சாண்டோ நடராஜா
உடற்பயிற்சிக் கழகத்தினால் நடத்தப்படும்

## வட மாகாண ரீதியிலான போட்டிகள்

ஆர்வலர்களே!
மலாயன் சாண்டோ நடராஜா உடற்பயிற்சிக் கழகத்தினால் நடத்தப்படும் வட மாகாண ரீதியிலான -

* குத்துச் சண்டை * கம்பிழுத்தல் * மல்யுத்தம்
* கயிறிழுத்தல் (ஆண்,பெண்) * கைமடித்தல்
* ஆணழகன் (21 வயதுக்குக் கீழ், 21 வயதுக்குமேல், 30 வயதுக்கு மேல்)

ஆகிய போட்டிகள் எதிர்வரும் 5,6,7 ஆவணி மாதம் 2005ஆம் ஆண்டு நடைபெறவுள்ளன.

பங்குகொள்ளும் வீரர்கள் விண்ணப்பப்படிவங்களை குபேரன் தொலைத்தொடர்பு நிலையம், பருத்தித்துறையில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்கள் அனுப்ப வேண்டிய முடிவுதிகதி வீரர்கள் போதாமையால் 25-07-2005 அன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

இடம்: திக்கமுனை மைதானம், பருத்தித்துறை.

(C/44214)(46-17-18-24) T.P:. 021 2268077, 021 226 8950


SAAMSTECH இன் ஆங்கில, கணினி தொடர்பான கீழ்வரும் பணியிடங்களுக்கு

**பயிற்சியும் பணி நியமனமும்**

1. Academic Staffs,
2. Technical Officers
3. Administrative Officers
4. English Teachers
5. Web and Multimedia Designers

**கல்வித்தகுதி** : க.பொ.த உயர் தரத்தில் சித்தி.
இவ்வருடம் பரீட்சையில் கலந்துகொண்டு 3 பாடங்களிலும் சித்தியடையக்கூடியோரும் விண்ணப்பிக்கலாம்.
ஆங்கிலப் பாடத்தில் சித்தி எதிர்பார்க்கப்படவில்லை

**பயிற்சிக்காலம்** : 3 மாதங்கள். (தினமும் 4 மணிநேரம்) வாரத்தில் 5 நாட்கள்

**கட்டணம்** : ரூபா 12000/-

**பயிற்சி நெறியின் முடிவில் அந்தந்த மாவட்டங்களிலேயே பணி நியமனம்**

சுயவிபரக்கோவை, சான்றிதழுடன் நேரில் வரவும்

**SAAMSTECH**

841, HOSPITAL ROAD, JAFFNA
PH : 0773068968


# அறிவித்தல்

அளவெட்டி பிரசித்த நொத்தாரிஸ் வ.தம்பிப்பிள்ளை அவர்களுடன் உறுதிகள் சம்பந்தமாக தொடர்புகொள்ள இருப்பவர்கள் அவரை, அவரது அளவெட்டி வீட்டில் வந்து உரிய விவரங்களுடன் சந்திக்கவும். இருகிழமைகளுக்கு இவ்விடம் இருப்பார்.

வ.தம்பிப்பிள்ளை,
பிரசித்த நொத்தாரிஸ்,
மலைவேம்படி, அளவெட்டி.

(37853)(38-17-18-24)

## வெளியீட்டு விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை18

ஜோவில் இராஜசேகரம்பிள்ளை ஆனல்ட் எழுதிய நூல் தொகுப்பு வெளியீட்டு விழா எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், 'தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆனல்ட் சதாசிவம்பிள்ளை' என்னும் தலைப்பில் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா 'கிறிஸ்தவ இலக்கிய வரலாற்றில் ஆனல்ட் சதாசிவம்பிள்ளை' என்னும் பொருளில் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

தொடர்ந்து நூல் தொகுப்பு வெளியீடு இடம்பெறும். (எ-204)

***

யாழ்ப்பாணம்,ஜூலை18

கோப்பாய் க.இ.குமாரசாமி ஆசிரியர் எழுதிய 'இலங்கையிற் கற்புடைய மாதர் வழிபாடு', 'யாழ். தமிழரும் இந்து மத வழிபாடுகளும்' ஆகிய இரு நூல்களும் வெளியீட்டுவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலஷ்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-204)

## தற்காலிக சிகிச்சை நிலையம் நிறுவ ஏற்பாடு

வட்டுக்கோட்டை,ஜூலை18

வட்டுக்கோட்டை கிராமிய வைத்திய சாலையின் குழந்தைகள், கற்பவதிகளுக்கான சிகிச்சை நிலையத்துக்குக் கட்டட வசதியின்மையால் தற்காலிக சிகிச்சை நிலையம் ஒன்றை அமைக்க வைத்தியசாலை அபிவிருத்தி சபை முயற்சி மேற்கொண்டுள்ளது.

வைத்தியசாலை பிரசவ விடுதியின் முற்பகுதி விறாந்தையிலேயே குழந்தைகள், கற்பவதிகளுக்கான சிகிச்சை நிலையமும் இயங்கிவருகின்றது. மழை காலங்களில் தூவானம், ஈரலிப்பு போன்றவற்றால் மேற்படி நிலையத்தில் சிகிச்சை பெறுவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சிகிச்சை நிலையத்துக்கெனக் கட்டடத்தை அமைப்பதற்கு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதி வழங்கப்பட்ட போதும், அரசின் நிதி ஒதுக்கீடு எதுவும் கிடைக்கவில்லை என்று வைத்திய சாலை வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்பட்டது. (எ-161)

உ

கோப்பாய் க.இ.குமாரசாமி ஆசிரியர் அவர்களது

I. இலங்கையிற் கற்புடைய மாதர் வழிபாடு
II. யாழ்.தமிழரும் இந்துமத வழிபாடுகளும்

ஆகிய இரண்டு நூல்களின்

## வெளியீட்டு விழா

இடம்:- கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதி லஷ்சுமி மண்டபம்
அரங்கு:- வீரமணிஐயர் அரங்கு
காலம்: - இன்று (18-07-2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி

(37873)(46-17-18-24)


**Dialog GSM டயலொக்**

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் Sim இணைப்புகளையும், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள -

சகல விதமான தொலைபேசி அட்டைகளையும் இணைப்புகளையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள் துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகள்

kit எந்நேரமும் உன்னுடன்...

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்தில் இருந்தும் ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**Sri Murugan**
**Tele Communication & Agenc Post Office,**
303, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 5392, Fax: 222 3214

(சி-43268) (24-17-18)

**VALUE LAPTOPS**




| Intel Centrino | VIA C3 Nehemiah |
|---|---|
| Mobile Processor 1.6 Ghz | Mobile Processor 1.0 Ghz |
| 256MB DDR RAM (Max 2GB) | 256MB DDR RAM (Max 2GB) |
| 14.1" XGA LCD Screen | 14.1" XGA LCD Screen |
| 40GB HDD | 40GB HDD |
| Combo Drive (DVD-ROM+CD-RW) | Combo Drive (DVD-ROM+CD-RW) |
| 2 USB, Parallel, TV out, RJ45,1394 | 4 USB, Parallel, RJ45 |
| 10/100 Base-T LAN and 56K Modem | 10/100 Base-T LAN |
| Built-in Wi-fi & IR port | 56K Modem |
| MMC & SD card reader | 315 x 255 x 35.5 mm |
| 326 x 258 x 25.3 mm | 2.4 Kg |
| 2.0 Kg | |

Offer Price 125,500/= net ⟵ யாழ் நகரில் ⟶ Offer Price 87,000/=net

**MICRO PC SYSTEMS**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 175/3 Kasturiyar Rd, Jaffna. Tel: 021 2225893, 077 312 6712 |
| நெல்லியடி | Main Street,(Next to Police Station) Nelliyadi. Tel: 077 3039536 |
| வவுனியா | 73C, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 4588339, 0777308417 |
| திருகோணமலை | 148, Main Street, Trinco. Tel: 026 222 1054 078-5720369. |
| கொழும்பு - 06 | 15. 36th Lane, Colombo-06 Tel: 011-4513235, 011-4516764 |
| கொழும்பு - 13 | 82, New Chetty St, Kotahena, Tel: 011-4613617, 011-4619673 |

CORPORATE OFFICE: No.37, 37th Lane, Wellawatte, Colombo-06. Tel: 0114 510686


# வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபையின் கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 2005-07-29 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை நிர்மாணிப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட் 9) பதிவுசெய்யப்பட்டவர்கள் கீழே குறித்த தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 1-4 வரையான வேலைத்திட்டங்களுக்கு உள்ளூர் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களும் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப்பத்திரத்தில் ஒரு பிரதியைக் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து செயலாளர், வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இட்டு இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 2005-08-03ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கிடையில் கிடைக்கச்செய்தல் ஒப்பந்தகாரரின் கடமையாகும்.
03. கேள்விகள் 2005-08-03ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்விகள் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
04. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படாத பெறுமதி சேர் வரி |
|---|---|---|---|---|
| 01. | திறந்த கிணறு திருத்தம், அத்தாய், அல்வாய் | 700.00 | 500.00 | 75.00 |
| 02. | திறந்த கிணறு திருத்தம், கதிரொளி | 800.00 | 500.00 | 75.00 |
| 03. | திறந்த கிணறு திருத்தம், சாண்டாசந்தை, நவிண்டில் | 500.00 | 500.00 | 75.00 |
| 04. | திறந்த கிணறு திருத்தம், அந்திரான் | 300.00 | 500.00 | 75.00 |
| 05. | வெள்ளெருவை வைரவர் வீதி மீள் திருத்தம் | 1,750.00 | 500.00 | 75.00 |
| 06. | கிழவிதோட்ட வீதி புனரமைப்பு | 2,750.00 | 500.00 | 75.00 |
| 07. | உச்சில் அம்மன் வீதி புனரமைப்பு | 3,000.00 | 500.00 | 75.00 |
| 08. | பெரியதோட்ட அத்துளு வீதி புனரமைப்பு | 1,500.00 | 500.00 | 75.00 |
| 09. | நெல்லியடி பொதுச்சந்தைக்கான சைக்கிள் தரிப்பிடம் அமைத்தல் | 900.00 | 500.00 | 75.00 |
| 10. | குழாய்க் கிணறு அமைத்தல், தேவரையாழி, வதிரி | 1,000.00 | 500.00 | 75.00 |
| 11. | உப அலுவலகத் திருத்தம், கட்டைவேலி | 1,750.00 | 500.00 | 75.00 |
| 12. | பொது நூல்நிலையத் திருத்தம், நெல்லியடி | 1,500.00 | 500.00 | 75.00 |
| 13. | உப அலுவலகத் திருத்தம், உடுப்பிட்டி | 1,500.00 | 500.00 | 75.00 |

சி.வே.குலநாயகம்
செயலாளர்,
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

(சி/44208) (24-17-18)


தரமான பற்பொடி கருவேலன் பற்பொடி

உங்கள் பற்களைப் பாதுகாக்கும் ஓர் உன்னத தயாரிப்பு
இயற்கை மூலிகைகள் கொண்டு தயார் செய்யப்பட்டது.

* முரசுகரைதல்
* வாய்நாற்றம்
* பல்வேதனை
* பற் கூச்சம்

கருவேலன் பற்பொடி EVEREST

இவையனைத்துக்கும் உடனடி நிவாரணி

**KARUVELAN TOOTH POWDER**

நல்ல தரமான புதிய ரகமான நவீன தயாரிப்புக்கள்

குழந்தைகளுக்கான ஓமவாட்டர்



* நூறுவீதம் இயற்கையானது
* பக்கவிளைவு அற்றது.
* ஆயுர்வேதத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது.
* பாரம்பரிய சித்த வைத்தியர்களின் ஏட்டுப்பிரதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது.

கிடைக்கும் இடம்: எவரெஸ்ட் சித்தமருந்தகம் வட்டு வடக்கு. சித்தன்கேணி

எல்லா மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(C/44212)(31-14-45)



உப்புமாவெளி இடைத் தங்கல் முகாமில் சிறுவர் விளையாட்டு மைதானம் திறந்து வைக்கப்பட்ட வைபவத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# முல்லை நலன்புரி நிலையத்தில் சிறுவர் விளையாட்டு மைதானம்

## வைபவரீதியாக திறந்துவைப்பு

கிளிநொச்சி,ஜூலை18

இளையோர் செயற்பாட்டு நிறுவனமும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்த செயற்றிட்டத்தின் கீழ் முல்லைத்தீவில் உப்புமா வெளி இடைத்தங்கல் முகாமில் சிறுவர் விளையாட்டு மைதானம் வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்காக இந்த மைதானம் அமைக் கப்பட்டுள்ளது.

இளையோர் செயற்பாட்டு நிறுவனமும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்த செயற்றிட்டத்தின் கீழ் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் முல்லை மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு உப்புமாவெளி, இடைத்தங்கல் முகாமிற்கான சிறுவர் விளையாட்டு மைதானம் வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

விளையாட்டுத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் முதல் நிகழ்வாக பொதுச்சுடரேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. இச்சுடரினை முகாம் தலைவர் ச.பிரதீபன் ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை உதைபந்தாட்ட லீக்கின் முல்லை மாவட்டத் தலைவர் கே.சிவனடியார் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கம் நடைபெற்றது. விளையாட்டு மைதானத்திற்கான பெயர்ப் பலகையினை கே.சிவனடியார் திரை நீக்கம் செய்து வைத்தார். மைதானத்தினை இளையோர் செயற்பாட்டு நிறுவனத் திட்ட முகாமையாளர் எஸ்.ஜீவா நாடாவெட்டி திறந்து வைத்தார்.

விளையாட்டு உபகரணங்களை முல்லைத்தீவு உதைபந்தாட்ட மத்தியஸ்தர் வின்சன் வழங்கினார். தியோநகர் அளம்பில், செம்மலை வடக்கு, செம்மலை கிழக்கு ஆகிய இடங்களிலும் மைதானங்கள் கையளிக்கப்பட்டது.(3)

## தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூலை18

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரபந்தாட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், 17 வயதுப் பிரிவில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியும் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள் ளன.

மாகாண மட்ட போட்டியில் 15 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இரண்டாவது இடத்தையும் 17 வயதுப் பிரிவில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.(ஐ-190)

## விளையாட்டு

## விளையாட்டு நிகழ்வுகளில்



யாழ்.மத்திய கல்லூரியில் அண்மையில் நடந்த விரைவு நகர்த்தல் சதுரங்கப் போட்டியில் கலந்துகொண்டவர்களின் போட்டியின் ஒரு கட்டத்தைப் படத்தில் காணலாம். (3)



நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் திருநெல்வேலிக் கிளை முகாமையாளர் சி.என்.ஜெகநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரன், உதவிப் பிரதேச செயலர் திருமதி இ.இரத்தினராஜா, விளையாட்டு உத்தியோகத்தர் கே.விஜிதரன் ஆகியோரையும் காணலாம். (3-86)



புங்குடுதீவு கணேச கனிஷ்ட மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் புங்குடுதீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் இசைச்செல்வன் மங்கல விளக்கேற்றுகிறார். அருகில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட தீவக வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சோ.தில்லைநாதன் வித்தியாலய அதிபர் S.K.சண்முகலிங்கம் மற்றும் விருந்தினர்கள் காணப்படுகின்றனர். (3)



## சென்.ஜோன்ஸ் வீரர் சதம் அடித்தார்

யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான அஸ்ரா கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் 15 வயதுக்குட்பட்டோர் பிரிவுகளுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர் ஹரிப்பிரவீண் ஆட்டம் இழக்காமல் சதம் அடித்தார்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கிளிநொச்சி மத்திய வித்தியாலய அணியுடனான ஆட்டத்திலே இவர் 100 ஓட்டங்களைப் பெற்றார். (3-190)

## கே.ஸி.ஸி.ஸி. கிண்ணக் கிரிக்கெட்

# சென்றலைட்ஸ் வெற்றி!

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணிக்கும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் வி.க வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் சகல விக்கெட்டினையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது.

சுதர்சன், கார்த்தீபன், பிரகாஸ் ஆகியோர் முறையே 32, 20, 19 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

றொபேசன் 3விக்கெட்டினையும் கிற்சபேசன், துஷயந்தன், பிரகாஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

றொபேசன், சிவசங்கர் ஆகியோர் முறையே 24, 23 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பிரகாஸ் 3 விக்கெட்டுகளையும் பிரசாந், சாள்ஸ், கார்த்தீபன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். (ஐ-190)

# மானிப்பாய் பரிஸ் அணி ஓல்ட்கோல்ட்ஸை வீழ்த்தியது!

யாழ்ப்பாணம்,ஜூலை18

மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழக அணி 5 விக்கெட்டினை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெயராஜ் ஆட்டம் இழக்காமல் 110 ஓட்டங்களையும் சிவாஸ், பார்த்தீபன் ஆகியோர் முறையே 52, 25 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

லக்ஸ்மன், செந்தூரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் தனகரன் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி 9 விக்கெட்டுகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

செந்தூரன், மயூரன், நிருபரன் ஆகியோர் முறையே 50, 23,17 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

ஜெயரூபன் 3 விக்கெட்டுகளையும் கிசோக்குமார், சுபாஸ்கரன், பார்த்தீபன், பாஸ்கரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழக அணி 113 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது. (ஐ-190)



அரியாலை மேற்கு முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி மைதானத்திலே நடைபெற்றது. இதில் வெற்றியீட்டிய மழலை ஒருவருக்கு ஓய்வுபெற்ற தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலரும் சமாதான நீதிவானுமாகிய கா.பீதாம்பரம் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.
(படம்: கைதடிச் செய்தியாளர்)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
21 - 04 - 1929

உதிர்வு
21 - 07 - 2002

### திருமதி தம்பிராசா அன்னலட்சுமி

திதி: 18.07.2005

ஆண்டுகள் மூன்று சென்றாலும்- எம்
மனதை விட்டகலாத அம்மாவே!
உங்கள் பாசத்திற்காகத் தவிக்கின்றோம்
எங்கள் நெஞ்சம் இருக்கும் வரை -உங்கள்
நினைவுகள் இருக்கும்!

*மன்னார் எக்ஸ்பிரஸ்,*
*கே.கே.எஸ்.வீதி.*
*இணுவில்.*
(37885) (39-14-45)

*பிரிவால் துயருறும்:*
கணவர், பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



### உலகப் பிரசித்தி பெற்ற ஆன்மீக குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின் வாழும் கலைப் பயிற்சி

* மன இறுக்கம், மன உளைச்சல் நீங்கி தெளிந்த மனம், அமைதி, தன்னம்பிக்கை வளர
* இரத்தக் கொதிப்பு, ஆஸ்துமா, நீரிழிவு, ஒற்றைத் தலைவலி போன்றவற்றை நீங்கி உடல் ஆரோக்கியம் பெற
* தன் சக்தி அறிந்து, உள் உணர்ந்து ஆன்மீக வழியில் வளர்ந்து உற்சாகமும் ஊக்கமும் கொண்டு செவ்வனே பணி செய்ய–

## இலவச அறிமுக உரை

யாழ்ப்பாணத்தில்... சைவபரிபாலன சபை

நாள்:- 18.07.2005 திங்கட்கிழமை மாலை 6.00 மணி
இடம்:- சைவபரிபாலன சபை, நாவலர் ஆச்சிரம மண்டபம், நீராவியடி.

பயிற்சி நாள்கள்:-19.07.2005 செவ்வாய்க்கிழமை முதல் 24.07.2005 ஞாயிறுக்கிழமை வரை

பயிற்சி நேரம்:- காலை 6 மணிமுதல் 8 மணிவரை
அல்லது
மாலை 6 மணிமுதல் 8 மணிவரை

*அன்பில் மலருங்கள்* *உங்களை உணருங்கள்*

*அனைவரும் வருக!*

*மேலும் விவரங்களுக்கு:–*
வாழும் கலை அறநிறுவனம், யாழ்ப்பாணம் மையம்.
தொ.பே. 077 9059 549, 077 9059 544, 222 6048, 0777 078 349.
www.artofliving.org

## 16.07.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்



செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300417481 இலிருந்து 300435138 வரை

சீட்டிழுப்பு இல. 1624

**14 19 41 61** சுப்பர் எண் **14**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.62,25,750/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 01 | 80,04,550/- | 80,04,550/- |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 33 | 5,000/- | 1,65,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 461 | 1,000/- | 4,61,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,495 | 500/- | 7,47,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,683 | 40/- | 9,07,320/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,501 | 20/- | 4,30,020/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,21,911 | 10/- | 32,19,110/- |
| | | மொத்தம் | 1,49,34,500/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,சைக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 1,54,34,500/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 20,00,00/-

தொடர் இல. 200455261 க்கு மேற்பட்ட கதா திற டிக்கட்டுக்கள் 2005 ஜூலை 20 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

| | |
|---|---|
| கொழும்பு | 300427181-3-22 |
| கொழும்பு | 300427526-8-67 |
| காலி | 300424315-5-11 |
| கம்பஹா | 300421922-2-12 |
| கொழும்பு | 300422120-9-47 |

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## புற்றுநோய்க்கான சிகிச்சைநாள் மாற்றம்

தென்மராட்சி,ஜூலை18

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நடைபெற்று வந்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு நடைபெறும தினம் மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இதுவரை நாளும் பிரதி திங்கட்கிழமை களில் பிற்பகலில் நடைபெற்று வந்த இச்சிகிச் சைப் பிரிவு இனிவரும் காலங்களில் மாதத் தின் இரண்டாவது புதன்கிழமைகளில் காலை 8.30 மணிக்கு நடைபெறுமென ஆஸ்பத்திரிப் பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகன் அறிவித்துள்ளார். (3-117)

## வலிகாமம்மேற்கில் அடிக்கடி மின்தடை

தொல்புரம்,ஜூலை18

தொல்புரம், சுழிபுரம், வடலியடைப்பு, பண் ணாகம் ஆகிய பகுதிகளில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக இந்தநிலை தொடர்வதாகவும்- சீரற்ற மின் விநியோகம் காரணமாக மின்பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும்- கூறப்பட்டது. (எ-119)

## பரிசுதியச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றோருக்கு தங்க நாணயங்கள்

தென்மராட்சி,ஜூலை18

மக்கள் வங்கியின் ஜெயஸ்ரீ பரிசுதியச் சீட்டிழுப்பில் தங்கநாணயம் வென்ற சாவகச் சேரி மக்கள் வங்கி வாடிக்கையாளர்களுக்கு கடந்த வெள்ளியன்று தங்க நாணயங்கள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சிவ பாலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் து.ரகு முதன்மை விருந்தி னராகக் கலந்துகொண்டு வெற்றியாளர்க ளுக்குத் தங்க நாணயங்களை வழங்கினார்.

சாவகச்சேரி மக்கள் வங்கி வாடிக்கை யாளர்கள் பத்துப் பேருக்குத் தங்க நாணயம் பரிசாகக் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (எ-117)

## சின்னமடு பாடசாலையில் ரூ 2லட்சம் செலவில் கிணறு

சேவாலங்கா நிறுவனம் சரவணை சின்னமடு றோ.க.த.க.பாடசாலைக்கு 2 லட்சம ரூபா செலவில் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

போர் அனர்த்தங்களின் பின்னர் 2003 ஆம் ஆண்டில் இருந்து மீளவும் இயங்கி வரு கின்ற இந்தப் பாடசாலைக்கு இதுவரை காலமும் கிணறு வசதி செய்துகொடுக்கப் படவில்லை.

தற்போது பாடசாலைக்கென கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதால் பாடசாலை மாணவர்கள் இதுவரைகாலமும் குடிதண் ணீரைப் பெறுவதற்கு இருந்துவந்த சிரமங் கள் நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால், மாணவர்கள், ஆசிரியர்களது அடிப்படைத் தேவைகள் ஓரளவு பூர்த்தி செய்யப் பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது,(எ-203)

## விசேட பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவி ருத்தி நிலையத்தினால் நடத்தப்படும் மீன்பி டியியல் விஞ்ஞான டிப்ளோமா இறுதிக் கற்கை நெறி மாணவர்களுக்கான விசேட பரீட் சைகள் நடைபெறும் திகதிகள் பிற்போடப் பட்டுள்ளன.

மேற்படிப் பரீட்சைகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது.

பரீட்சை நடைபெறும் புதிய திகதி பின்னா அறிவிக்கப்படும் என்றும் கடல்வள அபிவி ருத்தி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் கா.சித்திரவடிவேலு தெரிவித்துள்ளார். (எ-7-203)

## கடமையில் இருந்த சிப்பாய் மாரடைப்பினால் மரணம்!

தென்மராட்சி,ஜூலை18

கடமையில் இருந்த சிப்பாய் மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார். கிளாலி முகாமில் கடந்த வியாழக் கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கடமையிலிருந்த வேளையில் குறிப் பிட்ட சிப்பாய்க்கு மாரடைப்பு ஏற்பட்டதாகவும் அம் புலன்ஸ் மூலம் பலாலி இராணுவ ஆஸ்பத் திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட இவர், கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை அங்கு மரணமானதாகவும் தெரிவிக்கப்பட் டது.

மல்சில்புரவைச் சேர்ந்த கே.டி.ஐ.ஏ.திஸா நாயக்கா (வயது 40) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

கொடிகாமம் பொலீஸார் இச்சம்பவம் தொடர் பாகச் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப் பித்ததையடுத்து நீதிவான் பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்குச் சென்று விசாரணை நடத்தினார்.

கொழும்பு சட்டவைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கு மாறும், பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் சடலத்தை ஒப்படைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (எ-117)

## கணபதி ஜோதிட நிலையம்

### பண்டிட் ஐயப்ப சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (37217)(26.19)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
10 - 08 - 1923



மறைவு
19 - 06 - 2005

### திருமதி சின்னம்மா துரைசிங்கம்

*ஆராதனைக்குரிய அம்மா எம் ஒளிவிளக்கே!*
*தீராத வேதனையால் தினந்தோறும் துடிக்கின்றோம்*
*வேராக நீரிருந்து எம் வேதனைகள் தீர்த்துவைத்தீர்!*
*ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்!*

பார்த்திப ஆண்டு 2005.06.19 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த இல்லத்தலைவியின் அந்தியேட்டிக்கிரியை இன்று (18.07.2005) திங்கட் கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை மருதடி வீரபத்திரர் ஆலயத்திலும், வீட்டுக்கிருத்திய சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (19.07.2005) செவ வாய்க்கிழமை முற்பகல் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் இவற்றில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (37877) (39-14-45)

*பிரதான வீதி, மருதடி,*
*பருத்தித்துறை.*

– குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரி திரேசா அருளப்பா

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாக்வும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிதிரேசா அருளப்பா 15.07.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை மரியப்பிள்ளை தம்ப தியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற (ஓவசியர்) அருளப்பாவின் அன்புமிகு மனைவியும் திருமதி நேசம்மா சீவரத்தினம், இராச துரை, திருமதி சூசைப்பிள்ளை இராசமுத்து, திருமதி பூமணி இராசதுரை, தேவசகாயம் (அரியதுரை), இம்மனுவேல், திருமதி மெற்றில்டா பெனடிக்ற் ஆகியோரின் சகோதரியும் திருமதி றெஜினாசேவி, திருமதி குயீன்சேவி, திருமதி குமாரிகாசேவி, திருமதி வேஜின்சேவி, ஜோய், மீனாசேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் குமுதினியின் அன்பு மாமியாரும் ஜெனி, கவிதா, ஷிவான், மாயா, பிரியா, கன்யா, கிறிஷ்னி, நவீனன், மிதுனா, மிதின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக 20.07.2005 புதன் கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக் கஞ்செய்யப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

*பத்திமாகிரி,*
*பண்டத்தரிப்பு.*
(37879) (39-14-45)

தகவல்:
பூமணி இராசதுரை.

### கலாபூசணம், பண்டிதர், அண்ணாவியார், அதிபர் அ.முருகவேள்



(சிந்துபுரம் /சிவன்கோயிலடி,வட்டுக்கோட்டை)

சிந்துபுரம்/ சிவன்கோயிலடி, வட்டுக்கோட் டையைச் சேர்ந்த கலாபூசணம், பண்டிதர், அண் ணாவியார், புராணபடன வித்தகர், இளைப் பாறிய அதிபர் அப்புக்குட்டி முருகவேள் அவர்கள் 16.07.2005 சனிக்கிழமை தனது எண்பதாவது அகவையில் இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தர்வழித்தோன்றலர் சரவணமுத்து அப்புக்குட்டி- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் அமரர் இராசேஸ்வரிஅம்மாளின் அன்புக் கணவரும் அமரர்களான துரைராசசிங்கம், மார்க்கண்டபிள்ளை, சரஸ்வதியம்மா, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாக்கியம், இராசேஸ்வரி, தளையசிங்கம், வீரபத்திரர், நெல்லிநாதபிள்ளை, சிதம்பரநாதன், தனலட்சுமி, வயிரவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சம்பு கேஸ்வரி, நிர்மலசிங்கம் (பிரான்ஸ்), சரோருகேஸ்வரி, சந்திரேஸ்வரி, சடாச்சரசிங்கம் (TRO கிளிநொச்சி), ஞானேஸ்வரி, கணநாதன் (அரசினர் வைத்தியசாலை, காரைநகர்), உதயகுமாரன் (பல்கலைக்கழகம், யாழ்பபாணம்), கமலேஸ்வரி, ஞானேஸ்வரன் (பிரான்ஸ்), கமலவதனி, இன்பவதனி, ஜெயக்குமார் (சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி) ஆகியோரின் சிறியதந்தையும் அரசகுல சிங்கம் (தபாலதிபர், மட்டக்களப்பு), இந்திரகுலசிங்கம் (கனடா), தர்மகுல சிங்கம், குமரகுலசிங்கம், சிவஞானதேவி, விஜயகுலசிங்கம் (கனடா), லோகநாயகி, அருள்மணி, வேல்நாயகம் (நகை வாணிபம், கிளிநொச்சி), சிவநாதன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), கமலநாயகி, ஜீவகல்யாணி, சிவமலர், வீரராணி, சசிகலா, நாக நந்தகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் லலிதாதேவி, சுதா, கோவீரசிங்கம் (கனடா), நேசமலர், விக்கினேஸ்வரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சிறியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.07.2005) திங்கட்கிழமை அன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். (37882) (39-14-45)

*சிவன் கோயிலடி, சிந்துபுரம்,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
மா.கணநாதனும் சகோதரர்களும்.

# ஏலவிற்பனை

காலம்: - 2005.07.24

பொருள் விரிப்பு-

- இலத்திரனியற் பொருள்கள்
- மின்னியற் பொருள்கள்
- ஊர்தி உதிரிப்பாகங்கள்
- புடைவை வகை
- அழகுசாதனப் பொருள்கள்

(சி-44219)(29-11-34)

இடம்:- கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக

மேலதிக விவரம் வெகுவிரைவில்....


## ஈராக் பிரதமர் ஈரானுக்கு விஜயம்

ஈராக் பிரதமர் இப்ராஹிம் அல் - ஜபாரி நேற்று முன்தினம் ஈரானுக்கு விஜயம் செய்தார்.

நீண்ட நாள்களாக பகைநாடுகளாயிருந்த ஈரான் - ஈராக் தமக்கிடையிலான உறவைப் புதுப்பிக்கும் வகையில் இந்தப் பயணம் அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

1980 முதல் தொடர்ந்து 8 ஆண்டுகள் ஈரான் - ஈராக் ஆகிய நாடுகளுக்கிடையில் நடைபெற்ற யுத்தத்தின் பின்னர், ஈராக் அரசியல் தலைவர் ஒருவர் முதல்தடவையாக ஈரானுக்கு விஜயம் செய்துள்ளார்.


### திருமணக்கார்

குளிரூட்டப்பட்ட நிசான் சனி

திருமணத்தேவைகளிற்கு வாடகைக்குண்டு.


0777 - 283795 (37810)(29-11-34)

(நகரப்பகுதிக் கட்டணம் 2500/=)


# மரண அறிவித்தல்கள்

## முத்தர் தம்பையா

(புராண வித்தகர், கைதடி வடக்கு)



கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தர் தம்பையா நேற்று (17.07.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தர் - பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குருநாதர் - மீனாட்சிப்பிள்ளையின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் சகோதரரும் சரஸ்வதி, சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புத் தந்தையும் புவனேஸ்வரன் இராசமணி ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌசலா(ஆசிரியை, நவபுரம், கைதடி) அனுச்செல்வன் (வர்த்தகர், குருநகர்), சிவரூபன்(லண்டன்) ஜெயரூபி(முன்பள்ளி ஆசிரியர்), சிவரூபி (தொழில்நுட்பக் கல்லூரி), பவரூபன்(தொழில்நுட்பக் கல்லூரி), செந்தூரன், கமலரூபன் (ஹொலண்ட்), சசிரூபன்(குகன் களஞ்சியம், கைதடி வடக்கு) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.07.2005) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தச்சன்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(37887)(29-11-34)

வன்னியசிங்கம் வீதி, கைதடி வடக்கு, கைதடி.

தகவல்: த.சிவப்பிரகாசம்(மகன்), இ.புவனேஸ்வரன்(மருமகன்).

## தம்பு கிருஷ்ணபிள்ளை

காரைநகர், பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் கனகராயன்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பு கிருஷ்ணபிள்ளை அவர்கள் நேற்று(17.07.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - தங்கம்மாவின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, சரஸ்வதி, தனலஷ்மி மற்றும் குமாரசாமி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சசிகலா, தர்மிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகபவானின் அன்பு மாமனாரும் செல்வகுமார்(பிள்ளையார் பல்பொருள் வாணிபம் - கிளிநொச்சி), நிவாகரன், விஜிகரன் சதானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.07.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் கனகராயன்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகராயன் குளம். (37893)(29-11-34)

தகவல்: கி.பரமேஸ்வரி(மனைவி).

## கண்ணீர் அஞ்சலி



சிவன்கோயிலடி, வட்டு.மேற்கு,
வட்டுக்கோட்டையைச் சேர்ந்த
ஓய்வுபெற்ற அதிபர், தமிழறிஞர் கலாபூசணம்

### அப்புக்குட்டி முருகவேள்

அவர்கள் 16.07.2005 அன்று காலமானார்.

வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவின் ஆயுட்காலத் தலைவராக இருந்து நாட்டுக்கூத்தினை எமது ஊரில் இன்றுவரை காத்துவந்த முதுபெரும் கலைஞன்.

யாழ்ப்பாணத்தில் எமது ஊரிலேயே ஆதிகாலம் முதல் வடமோடி நாட்டுக்கூத்து ஆடப்பட்டு வந்தது. வடமோடி நாட்டுகூத்து ஏடுகளை அழியவிடாது அரும்பாடுபட்டு சேகரித்து பிரதியெடுத்து நாட்டுக்கூத்து அபிவிருத்திக்குழுவிற்கு வழங்கி அவற்றை இன்றுவரை காத்து வந்த ஒரு பெருந் தகையை எமது குழு இழந்து தவிக்கின்றது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து
அபிவிருத்திக்குழு,
சிவன்கோயிலடி, வட்டுக்கோட்டை.

(37889)(29-11-34)


### ஐடியல் அக்கடமி

67/5 கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

தரம் 9 முதல் (O/L) வரை

ஆரம்பம்: 18.07.2005 இன்று மாலை 4 மணி.

எமது ஆசிரியர்குழு

| | |
|---|---|
| கணிதம் - | V.N.பத்மநாதன் |
| | B.குகதாசன் |
| விஞ்ஞானம் - | A.தபேசன் |
| தமிழ் - | A.M. தாசன் |
| ச. கல்வி - | R.S.சந்திரன் |
| | S.திவாகரன் |
| ஆங்கிலம் - | V.விஜயபாஸ்கர் |
| | B.சுபாஸ் |
| சமயம்- | T.S.கந்தா |
| வர்த்தகம் - | S.நித்தி |
| விவசாயம்- | K.சுகாஸ் |
| புவியியல் - | S.திவா |
| தமிழ் இலக்கியம் - | E.சந்தானம் |
| சுகாதாரம் - | M.முகுந்தன் |

குறிப்பு- ❖ ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த நிறுவனம்

❖ தவணைப் பரீட்சைகள் நடத்தப்பட்டு தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்படும்.

❖ குறைந்த காலத்தில் கூடிய வகுப்புகள் எடுக்கப்பட்டு, பாடத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு வினாவிடை வகுப்புகளும் நடைபெறும்.

V.N.பத்மநாதன்
நிர்வாகி

(37888)(29-11-34)


# மரண அறிவித்தல்

## திருமதி பரதராசா சரஸ்வதி (பூவதி)



வடலியடைப்பு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வலந்தலையை வதிவிடமாகக் கொண்டவரும் தற்போது வடலியடைப்பு, பண்டத்தரிப்பில் வசித்தவருமான பரதராசா சரஸ்வதி (பூவதி) அவர்கள் 14.07.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரதராசாவின் மனைவியும் பொன்ராசா (ஜேர்மனி), தில்லேஸ்வரி, பேரின்பநாதன் (சுவிஸ்), அருளேஸ்வரி (லண்டன்), அருளேஸ்வரன் (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வரதலக்சுமி (ஜேர்மனி), சிவனேசராசா,விக்னேஸ்வரி (சுவிஸ்), மகேந்திரம் (லண்டன்), அருந்தா (ஜேர்மனி), கிரிசாந்தி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபி, மயூரி (ஜேர்மனி), சாந்தரூபி, பிரியதர்சினி, மயூரன், அஸ்வினி, ஆதவன் (சுவிஸ்), ஆரணி,ஆரணன், ஆரணியன் (ஜேர்மனி), ஷாம், ஸ்ரிவ் (லண்டன்), நவீன், சாணு (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2005) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக் கல்லூரி வீதி,
வடலியடைப்பு,பண்டத்தரிப்பு. (37895)(29-11-34)

தகவல்: குடும்பத்தினர்.

### பன்றி தாக்கியது

தோட்ட வேலையில் ஈடுபட்ட விவசாயி பன்றியினால் தாக்கப்பட்டு காயமடைந்தார். நேற்று முன்தினம் நுணாவில் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதேயிடத்தைச் சேர்ந்த கே.சிவபரமேஸ்வரன் (வயது38) என்பவரே காயமடைந்தார்.

(ஒ-117)


## இதோ அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்!
## புதிய பிரிவுகள் ஆரம்பம்

# aat (Sri Lanka)

Foundation level, Intermediate level & Final

Exam:- Jan. 2006

Minimum Requirement:- G.C.E. O/L 5 Passes or G.C.E. A/L 2 passes

Medium:- English & Tamil

பதிவுகளை இன்றே மேற்கொள்ளுங்கள்

*Further Details*

**Director**

**Jaffna College Undergraduate Dept.**

464, Hospital Road, (Near Commercial Bank)

Jaffna. T.P. No.: 021 222 3382

(சி-44220)(29-11-34)



# சுடர் ஒளி

THE SUDAR OLI

இவ்வார இதழில்...

- பொதுக்கட்டமைப்புக்கு பொல்லாத காலம்
- சுவடுகள் [புதிய தொடர் ஆரம்பம்]
- தமிழ்தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும் [தொடர்]
- இன்பம் தேடியவரை இறப்பு அழைத்தது...
- குழப்பத்தில் தவிக்கும் பாரதீய ஜனதா
- அறிவியல், பல்சுவை, மற்றும், உலகச் செய்திகளை தாங்கி வருகிறது.




ஜூலை 17-23, 2005

இப்பொழுது உங்கள் முகவர்களிடம்



### நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

ஷாம், லைலா, அஸின், பூஜா நடித்த

**உள்ளம் கேட்குமே** (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே).

### ராஜா யாழ்ப்பாணம்

விக்ராந்த், லட்சுமிராய், வடிவேல் நடித்த

**கற்க கசடற** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

### நாதன்ஸ் சினிமா

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன், சிநேகா,கிரண், வடிவேல் நடித்த

**சின்னா** (ரீல்ஸ்)



கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

(சி-43363)




அகில இலங்கை இந்துமாமன்றமும் யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியும் இணைந்து 'இலங்கையில் இந்து சமயம்' என்ற தொனிப்பொருளில் நடத்திய மாநாட்டின் நிறைவு நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.
இதில் கலந்துகொண்ட பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களில் ஒரு பகுதியினரையும் சிறப்புச் செயலமர்வில் பங்கேற்ற ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோரையும் படங்களில் காணலாம்.
(படங்கள் : பிரபா)

# சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக ஓகஸ்டில் இந்தியா - இலங்கை பேச்சு

மதுரை, ஜூலை18

சேது சமுத்திரத் திட்டம் குறித்து இலங்கையுடன் இந்தியா அடுத்த மாதம் பேச்சு நடத்தவுள்ளது.

இந்தியக் கப்பல் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் டி.டி.ஜோசப் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: -

சேது சமுத்திரத் திட்டக் கால்வாய் அமைப்பதற்கான அகழ்வுப்பணி கடந்த 2 ஆம் திகதி தொடங்கியது. கோடியக்கரையிலிருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் இந்திய அகழ்வுப்பணி நிறுவனத்தைச் சேர்ந்த 2 கப்பல்கள் இந்தப் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளன.

நாள்தோறும் 23 ஆயிரம் கனமீற்றர் அளவுக்கு அகழப்படுகின்றது. கால்வாய் அமைப்பதற்காகக் கடலில் தோண்டி எடுக்கப்படும் பொருள்கள் கால்வாய் அமையும் இடத்திலிருந்து வடக்குப் பகுதியில் நீண்டதூரத்தில் கடலின் ஆழமான பகுதியில் கொட்டப்பட்டு வருகின்றன.

சேது கால்வாய்த் திட்டத்தால் இந்தியக் கடல் பகுதிக்கோ, இலங்கைக் கடல் பகுதிக்கோ எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது. எனினும், இலங்கை அரசு பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளதாக வெளியான செய்தியைப் பார்த்தேன். ஆனால், அதற்கு வாய்ப்பு இல்லை. இத்திட்டத்தில் எந்த விதிமுறை மீறலும் இல்லை. முற்றிலும் இந்தியக் கடல் எல்லைக்குள் தான் இந்தப் பணி நடைபெறுகிறது. இலங்கை அரசு முன்பு சில அச்சங்களைத் தெரிவித்தது. அதன் பின் இலங்கை அரசின் அதிகாரிகள் இங்கு வந்த போது சேது சமுத்திரத் திட்டம் குறித்து முழுமையான விவரங்கள் அளிக்கப்பட்டு அவர்களும் திருப்தி அடைந்தனர்.

மேலும், இலங்கை அரசுக்கு எத்தகைய சந்தேகம் ஏற்பட்டாலும் அதைக் களைந்திட தயாராக உள்ளோம். வருகிற ஓகஸ்ட் மாதம் இலங்கைக் குழுவினருடன் இது குறித்துப் பேசவுள்ளோம் - என்றார் அவர். (ஒ-ரி)

# மினுவாங்கொடவில் இளைஞர் நேற்றுப் பகல் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஜூலை 18

மினுவாங்கொடவில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் மீது ஓட்டோ ஒன்றில் வந்த ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சூட்டுச் சம்பவம் நேற்றுப் பகல் 12.40 மணியளவில் மினுவாங்கொட, மிரிஸ்வத்த, யாகொட என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ரோகித (வயது-28) என்ற இளைஞரே கொல்லப்பட்டுள்ளார்.

மணல் அகழ்ந்து வியாபாரம் செய்யும் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு காரணம் எனத் தெரியவந்துள்ளதாகப் பொலீஸார் கூறுகின்றனர்.

மினுவாங்கொட பொலீஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (க)

## ஜூலை 25 ஆம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரசை ஆட்சியிலிருந்து அனுப்பும்வரை தமது போராட்டம் ஓயப்போவதில்லை என்றும்-

நாடாளுமன்ற ஜனநாயகத்தை மதிக்காத எவரும் இங்கு நிலையான ஆட்சியை கொண்டு நடத்த அனுமதிக்கமுடியாது என்றும் விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்தார். (க)

## பேரினவாதத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாதே'', ''மலையகக் கல்வியில் அரசியல் வேண்டாம்'', ''இனவாதத்தைத் தூண்டி நாட்டின் அபிவிருத்தியைத் தடுக்காதே'', ''மனிதாபிமானத்தை இனவாதம் ஆக்காதே'', ''அரசியல் இலாபத்துக்காக மலையக இளைஞர்களைப் பகடைக்காய் ஆக்காதே'', ''நாங்கள் கூலிகள் அல்லர்; சிந்தனைச் சிற்பிகள்'' என்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

தொடர்ந்து இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் மத்திய மாகாண சபையின் மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்களான திகாம்பரம், எஸ்.அருள்சாமி ஆகியோரும் கட்சியின் பொதுச்செயலாளர் மு.சிவலிங்கமும் உரையாற்றினர். (க)

## பேச்சுகள் மூலம் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

போர் மேகம் சூழ்ந்திருக்கும் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களிடம் சென்று விளக்கமளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வனுடனான சந்திப்புக்குப் பின்னர் ஊடகவியலாளர்களிடம் இரா.சம்பந்தன் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கையின் இன்றைய அரசியல் நிலைமை தமிழ்த் தேசிய இனத்திற்குப் பெரும் ஏமாற்றத்தைத் தருகின்றது.

கடந்த மூன்றரை வருடங்களாக - யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் - அரசியல் ரீதியாக எவ்விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இடைக்கால நிர்வாகம், பொதுக்கட்டமைப்பு யாவும் முடக்கப்பட்டு விட்டன. ஒரு விதமான முன்னேற்றமும் உருவாகவில்லை. இப்படியான நிலையில், சமாதானப் பேச்சு மூலமாக தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படும் என்ற விடயத்தில் நாங்கள் எல்லோரும் நம்பிக்கை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

அவ்விதமான ஒரு நிலையை நாங்கள் விரும்பவில்லைதான். ஆனால், அந்த நிலைமைக்கு நாங்கள் எல்லோரும் தள்ளப்பட்டிருக்கின்றோம். இது தொடர்பான சகல விடயங்களையும் மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் நாங்கள் மக்களிடத்தில் பிரசாரம் செய்ய இருக்கின்றோம்.

எல்லா மக்களுக்கும் தற்போதைய அரசியல் நிகழ்வுகள் புரியாமல் இருக்கலாம். அனைவரும் உண்மையை அறியவேண்டும். மக்களும் தங்களுடைய எதிர்ப்புகளை தங்களுடைய அதிருப்திகளை வெளிப்படுத்தக் கூடிய வகையில் சகல விடயங்களையும் புரிந்துகொள்ளவேண்டும். அதற்காக நாங்கள் மக்கள் மத்தியில் சென்று விளக்கங்களைக் கொடுக்கவேண்டிய கடமைப்பாடு இருக்கின்றது.

அதேபோல் சர்வதேச சமூகத்தினருக்கும் நாம் விளக்கங்களைக் கொடுக்கவுள்ளோம். அவர்களுக்கு நிலைமை தெரியாமல் இல்லை. இருப்பினும் தற்போதைய அரசியல் நிலைமைகளால் பாரதூரமான விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதைச் சுட்டிக்காட்டவுள்ளோம்.

சமாதானத்தை முன்னெடுப்பது என்ற அடிப்படையில் யுத்த நிறுத்தத்தினை ஏற்படுத்திய பிறகு ஒரு நாடு - ஓர்அரசு மூன்றரை வருடமாக அதனை முன்னெடுப்பதற்கு ஆக்கபூர்வமாக எதனையும் செய்யமுடியாது இருக்குமாக இருந்தால், அதனைப் பற்றி நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு விளக்கம் கொடுக்கவேண்டிய கடமைப்பாடு இருக்கின்றது. அந்த விளக்கத்தை நாங்கள் நிச்சயமாகக் கொடுப்போம்.

பொதுக்கட்டமைப்பு என்பது தற்போது உயிரிழந்து போய் உள்ளது. அது தொடர்பாகப் பேசுவதில் எதுவிதமான பிரயோசனமும் இல்லை.

திருமலை உள்ளிட்ட பல மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. கடைசியாக புலிகள் மீதான தாக்குதல் திருகோணமலையில்தான் நடத்தப்பட்டுள்ளது. திருகோணமலையைப் பொறுத்த வரை அது தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியே என்றார் - அவர். (க-3)

## நுணாவில் சந்தியில் பஸ்ஸிற்கு காத்திருந்தோரை விசர் நாய் கடித்தது!

தென்மராட்சி,ஜூலை18

பஸ்ஸிற்கு காத்திருந்த ஏழுபேரை விசர் நாய் கடித்தது.

நேற்று முன்தினம் காலை நுணாவில் சந்தியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

விசர் நாயினால் கடியுண்டவர்களில் ஆறுபேர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் மட்டுவில் தெற்கைச்சேர்ந்த வீ.மயூரவதனி (வயது 29)என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றனர்.

இந்த மாதத்தில் இதுவரை 50பேர் விசர் நாய்களினால் கடியுண்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று மருத்துவமனைப் பதிவேடுகளிலிருந்து தெரியவருகிறது. (ஒ- 117)

## 17 கிளைமோர் குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்குத் தயாராகவிருந்த 2 படகுகள் மற்றும் வெடிபொருள்கள் கொண்டுவரப்பட்ட ஓட்டோ போன்றவற்றையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஓட்டோவில் வந்த 2 பேர் தப்பிச் சென்றுவிட்டனர் எனவும், இந்த வெடிபொருள் கடத்தல் தொடர்பான சந்தேகத்தின் பேரில் 7 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் எனவும் வன்னிப் பிராந்தியத்திற்கான பிரதிப் பொலீஸ் மாஅதிபர் எம்.ஆர்.பெத்தேவல தெரிவித்தார்.

நாசகாரச் செயல்களுக்குப் பயன்படுத்தவே இவை கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தாம் சந்தேகிக்கிறார் எனவும், இதுதொடர்பான தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-க)

## சில்லுகள் இல்லா பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் இதுபற்றி கூறியதாவது:-

உயர்நீதிமன்றம் கடந்த 15ஆம் திகதி பொதுக்கட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நான்கு பிரிவுகளுக்குத் தடை விதித்துள்ளது. இந்தத் தடையுத்தரவானது நீதி வேண்டி நீதிமன்றுக்கு சென்ற தேச பக்தர்களுக்கு கிடைத்த மகத்தான வெற்றியாகும்.

நாம் ஆரம்பத்திலிருந்து இந்த ஒப்பந்தத்தை சட்டவிரோதமானது என்று குறிப்பிட்டு வந்தோம். அதன் உண்மை இன்று துலங்கிவிட்டது. நீதிமன்றம் வழங்கிய தடையுத்தரவுடன் நாம் நின்றுவிடப்போவதில்லை. தொடர்ந்தும் இந்த அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுவோம்.

பொதுக்கட்டமைப்பில் உள்ள பிரதான அம்சங்களுக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதால் அது நான்கு சக்கரங்களும் இல்லாத ஒரு பஸ் போன்றதே. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் மற்றும் ஐரோப்பாவில் உள்ள சில நாடுகள் என்பன பொதுக்கட்டமைப்புக்கு ஒரு சதமேனும் வழங்கமாட்டா என்று கையை விரித்துவிட்டதால் பொதுக்கட்டமைப்பு என்பதை செத்துப்போன ஒரு விடயமாகவே நாம் கருதுகிறோம். இருப்பினும் புலிகளுடன் அரசு செய்துகொண்ட ஒப்பந்தம் இலங்கையின் அரசமைப்புக்கு முரணானது அல்ல என்று கூறப்படுவதாக சிலர் வியாக்கியானம் செய்கின்றனர். அது முற்றிலும் தவறான விடயமாகும்.தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட விடயங்களைத் தவிர ஒருசில விடயங்களில் மட்டும் புலிகள் திருப்தியடைய மாட்டார்கள். இது ஜனாதிபதிக்கு கிடைத்த மாபெரும் தோல்வி. அவர் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் புலிகள் அதற்கு எவ்வளவு மதிப்பு வழங்கியுள்ளனர் என்பதை கிழக்கில் நடந்துவரும் வன்முறைகளிலிருந்து அறிந்துகொள்ள முடியும்.- என அவர் மேலும் கூறினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோரும் கலந்துகொண்டனர். (க)

## மரண அறிவித்தல்

### தர்மையா தேவறஞ்சன்

காரைநகர், சிதம்பராமூர்த்தி கேணியடியைச் சேர்ந்த தர்மையா தேவறஞ்சன் நேற்று (17.07.2005) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மையா - நாகேஸ்வரி தம்பதியினரின் மகனும் ரவிச்சந்திரன் (லண்டன்), மனோறஞ்சிதம் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவானந்தனின் (ஹொலண்ட்) மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிதம்பராமூர்த்தி கேணியடி,
காரைநகர். (37896)(29-11-34)

தகவல்:
த.நாகேஸ்வரி (தாய்).

IIS
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Batch 3 [ Weekend ] : 23.07. 2005
Batch 4 [ Weekday ] : 25.07. 2005 at 10.00 A.M.
1ம்,2ம் பிரிவுகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் 3ம், 4ம் பிரிவுகளுக்கான Diploma கணனிக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. IIS இன் 10வது வெற்றியாண்டினை முன்னிட்டு இப்பிரிவுகளில் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு மிகச்சிறந்த கட்டணச்சலுகையை IIS நிறுவனம் வழங்கிவருகின்றது.
இவ்வரிய சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்
கணனிக்கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS இல் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.
# 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-222 2831

CHEMISTRY/ GROUP CLASSES
2006,2007,Repeat
PAPER,THEORY CLASSES
DIAS B.Sc.(Hons) spl.CHEM.
NAVALAR INSTITUTE

PC REPAIRS திருத்தங்கள்
Software/Drivers installation
Windows problems
PC stuck
Power supply/Pack Problems
LCD Problems
Capture Card problems
Virus Problems
Internet & Email Setup
Display problems
Net-2-Phone configuration
Memory errors
Printers, Scanners & other
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

ஆயுள் முடிவதில்லை
பக்கம் 6 பார்க்க

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.